பிறந்த நாள், திருமண நாள் கொண்டாட்ட கேக்,
ஐசிங் கேக் வகைகள் மற்றும்
பொம்பே சுவீட்ஸ்,
மட்டன்றோல், பற்றிஸ்
வகைகளை ஓடர்செய்து
பெறவும், உடன் சுவைக்கவும்
தேனமுதம்
452, கேணல் கிட்டு சாலை,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspape

# உதயன்

விலை ரூபா 5-00

காலை உணவு அப்பம்,
பிட்டு, இடியப்பம்
மதிய உணவு இறைச்சி
மீன், மரக்கறி சோறு
மாலையில் றொட்டி,
கொத்துறொட்டிகளுக்கு
தேனமுதம்
452, கேணல் கிட்டுசாலை,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 09 சனிக்கிழமை (22 04 1995) UTHAYAN A Lively National Tami lDaily கதிர் 145

# திருமலையில் புலிகள் அதிரடித் தாக்கு

# ஸ்ரீலங்கா பொலிஸார் நால்வர் பலி!

## துறைமுகப்பகுதியில் 2 ஆவது சம்பவம்

கொழும்பு, ஏப்ரல் 22

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய மற்றொரு தாக்குதலில் நான்கு ஸ்ரீலங்காப் பொலிஸார் கொல்லப்பட்டனர். தற்போதைய தாக்குதலும் மிகப் பாதுகாப்புப் பிரதேசம் என்று கருதப்படும் திருகோணமலை துறைமுகப் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்துக்குள் ஊடுருவிய கடற் கரும்புலிகள் நால்வர் ஸ்ரீலங்கா கடற்படையினரின் இரு பீரங்கிக் கப்பல்களைத் தகர்த்ததும் இச்சம்பவத்தில் 14 கடற்படையினர் உயிரிழந்ததும் தெரிந்ததே.

நேற்றைய தாக்குதலில் ரோந்து சென்ற பொலிஸாரே கொல்லப்பட்டுள்ளனர். இருவர் படுகாயம் அடைந்தனர். ஒருவரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை படையினர் தாக்கியதுக்குப் பதிலடி கொடுக்குமுகமாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக "லங்கா புவத்" செய்தியை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது. (இ-7)

### குமண இடை நடுவில் திரும்பி சென்றது

வல்வெட்டித் துறை, ஏப். 22

கடந்த வியாழன்று பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி கொண்டிருந்த குமண கப்பல் கடற்படையினரின் உத்தரவுக்கு இணங்க முழுப் பொருள்களும் இறக்கப்படாத நிலையில் காங்கேசன் துறைக்கு திரும்பிச் சென்றது.

இந்த கப்பலில் தனியாருக்கு மோட்டார் பற்றறிகள் ம ற்

(6 ம் பக்கம் பார்க்க)

### படையினரின் விடுமுறைகள் ரத்து

யாழ்ப்பாணம், ஏப். 22

பொலிஸார் உட்பட சகல படையினரதும் விடுமுறைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

அவர்கள் படை நிலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். (இ-7)

### நரோமா திரும்பியது

வடமராட்சி ஏப். 21

திருகோணமலையிலிருந்து நரோமா கப்பல் ஒருதொகுதி பயணிகளுடன் நேற்றுக் காலை பருத்தித்துறை வந்து திரும்பிச் சென்றது (இ-173)

### முச்சந்தி முரளி



அப்ப சுற்றி வளைப்பு தொடர் கதை என்று சொல்லுங்கோ...!

### ஐரோப்பிய சமூகம் கண்டனம்

லண்டன், ஏப் 22

இலங்கையில் மோதல் தவிர்ப்பு முறிவடைந்தது குறித்து ஐரோப்பிய சமூகம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

## திருமலையிலிருந்து சென்ற ரயிலில் திடீர் சோதனை!

### தமிழர் பலர் கைதாகி தடுத்துவைப்பு

திருமலையில் இருந்து கொழும்பு சென்ற ரயிலை மருதானை ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து நேற்றுக் காலை பொலிஸார் இடைமறித்து திடீர் சோதனை நடத்தினர்.

அந்த ரயிலில் பயணம் செய்த தமிழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

தமது அடையாளத்தை தெளிவாக நிரூபித்தவர்களைத் தவிர ஏனையோர் தடுத்து வைக்கப்பட்டனர் என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. [ஐ-6-7)

### வடக்கு- கிழக்கு பகுதிகளில் உள்ள

## பௌத்த விகாரைகளின் பாதுகாப்பை அதிகரிக்குக!

### அரசிடம் ஐ. தே. க கோரிக்கை

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள பௌத்த மதத் தலங்களின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

பௌத்த விகாரைகளில் தகுந்த ஆயுதங்கள் இன்றி கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ள பொலிஸாரை நீக்கிவிட்டு உயர் பாதுகாப்பு பிரிவினரை அங்கு கடமையில் அமர்த்துமாறும் —

பௌத்த விகாரைகளில் உள்ள பிக்குகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஐயலத் ஜெயவர்த்தனா ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார். (ஐ-6-7)

# வடமராட்சி கிழக்கில் நேற்று

# படையினர் மீண்டும் தாக்கு!

## இருவர் காயம், தேவாலயம் வீடுகள் சேதம்

வடமராட்சி, ஏப். 22

வடமராட்சி கிழக்கில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் பீரங்கிப் படகுகள் நேற்று நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களின்போது ஒரு சிறுவனும் சிறுமியும் காயம் அடைந்தனர். தேவாலயம் ஒன்றும் வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

நேற்றுக் காலை இப்பகுதிக்கு வந்த ஐந்து பீரங்கிப் படகுகள் இத்தாக்குதல்களை நடத்தின.

காயம் அடைந்த இருவரும் பருத்தித்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதல்களால் மணற்காடு, நாகர்கோவில், குடத்தனை, பருத்தித்துறை, இன்பசிட்டி ஆகிய இடங்களில் பெரும் பதற்றம் நிலவியது.

மணற்காட்டுப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலிலேயே மேற்கண்ட இருவரும் காயம் அடைந்தனர்.

கடந்த புதன்கிழமை வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் நான்கு மீனவர்கள் காணாமற்போனது தெரிந்ததே.

[இ-7-15-117-173-118-155]

## வடமராட்சிக் கடற்பகுதி வெறிச்சோடிக் கிடக்கிறது

வல்வெட்டித்துறை, ஏப் 22

அரசின் மீன்பிடித்தடை அறிவித்தலால் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு கடற்பிராந்தியம் வெறிச்சோடிக்கிடக்கிறது.

மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாததால் நூற்றுக்கணக்கான மீனவ குடும்பங்கள் வருவாய் இழந்து பட்டினி நிலையை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு தினங்களாக வடமராட்சிக் கடற்பிராந்தியத்தில் கடற் படையினரின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. (இ-155)

## படையினர் தற்போது நடத்துவது மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலாம்

கடற்படையினர் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் தாக்குதல்கள் நடத்தப்படும்.

இப்படிப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு தெற்கே உள்ள நாகர்கோவிலுக்கு அருகே கடற்புலிகளின் தளமொன்று தாக்குதலுக்கு இலக்கானதாகவும் —

கடற்படையினர் பீரங்கிப் படகுகளையும், ரோந்துப் படகுகளையும் பயன்படுத்தி இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் — சேத விபரங்கள் தெரிய வரவில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது

அதே சமயம் நேற்று முன்தினம் வெற்றிலைக் கேணிப் பகுதியில் கடற்புலிகளின் இரு படகுகள் கடற்படையினரால் நாசம் செய்யப்பட்டதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### புலிகளுடன் அரசு விரைவில் தொடர்பு?

கொழும்பு, ஏப். 22

தற்போது தடங்கல் நிலையை அடைந்துள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக அடுத்த சில தினங்களில் அரசு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளும் என கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## கரும்புலிகள் உருவப்பட ஊர்தி நாளையும் நாளை மறுதினமும் பவனி

கொழும்பு, ஏப். 22

திருமலை துறைமுகத்துக்குள் ஊடுருவி கடற்படையினரின் இரு பீரங்கிக் கப்பல்களைத் தகர்த்தெறிந்து வீரச்சாவடைந்த கரும்புலிகளின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்திப்பவனி நாளை ஞாயிற்றுக் கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் கோட்ட ரீதியாக இடம் பெறும் என்று அரசியல் துறையின் யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இந்த ஊர்திப் பவனி இன்று ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

நாளையும், நாளை மறுதினமும் ஊர்திப்பவனி இடம்

(6 ஆம் பக்கம் பார்க்கவும்)

## கொழும்பில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர் - யுவதிகள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 22

ஸ்ரீலங்காவின் தலைநகர் கொழும்பிலும், தென் தமிழீழப் பகுதிகளிலும் ஸ்ரீலங்காப் படையினர் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மீதான கைது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கொழும்பில் கடந்த ஒரு தினங்களில் மட்டும் நூற்றுக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பகைமை ஏற்பட்டதை அடுத்து படையினர் கைது நடவடிக்கைகளை முன்னரைவிட அதிகரித்துள்ளனர்.

[6ஆம் பக்கம் பார்க்க]

## திருமலை கப்பல் தகர்ப்பின் போது

# இறந்த கடற்படையினர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் சாத்தியம்

### மூன்றாவது கப்பல் அருந்தப்பு

கொழுபு, ஏப். 22

கடந்த புதன்கிழமை அதிகாலை திருகோணமலைத் துறைமுகத்தில் விடுதலைப் புலிகள் தாக்கி அழிந்த இரண்டு கப்பல்களிலும் இருந்த கடற்படையினரின் எண்ணிக்கை இதுவரை கருதப்பட்டதை விடக் கூடுதலாக இருக்கக் கூடும் என்று சொல்லப்படுகிறது.

தாக்குதலில் பலியானோரின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்ததாக அறிவிக்கப்பட்டிருப்பினும் அது கூடுதலாக இருக்கும் என்றும் இப்போது நம்பப்படுகிறது.

சூரயா, ரணசுரு ஆகிய இரு பீரங்கிக் கப்பல்களும் கடற்படை இறங்குதுறையில் நங்கூரமிட்டு நின்றதால், அவற்றிலிருந்து கடற்படையினர் இறங்குவதும் ஏறுவதுமாக இருந்தனர். இத்தகைய நிலையில் சம்பவம் நடந்த வேளை எத்தனை பேர் கப்பல்களில் இருந்தனர் என்பதனைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமாகும் — என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்குள்ளான இரண்டு பீரங்கிக் [illegible]

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உபகரணங்களின் சிதறல்கள் கடலிலிருந்து மீட்கப்பட்டன!

கொழும்பு, ஏப். 22

திருகோணமலைத் துறைமுகத்தில் தாக்குதல் நடத்தி இரு பீரங்கிக் கப்பல்களைத் தகர்த்த கடற் கரும்புலிகள் அணிந்து சென்ற உபகரணங்களின் சிதறல்கள் படையினரால் கடலில் இருந்து மீட்கப்பட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கண்ணாடி இழையத்திலான சிலிண்டரின் பகுதிகள், சுழியோடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள், ஒரு முதுகுப் பொட்டணி சிலிண்டர், சுழியோடிகளுக்கான கையுறை, திசையறி கருவி, முகமூடி ஆகியவை இவற்றுள் அடங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-5]

## மற்றொரு பிலிப்பீன்ஸ் பிரஜைக்கு மரணதண்டனை

### சிங்கப்பூரில் நேற்று நிறைவேறியது

சிங்கப்பூர், ஏப். 22

பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த மற்றொரு நபர் உட்பட மேலும் ஐவருக்கு சிங்கப்பூரில் நேற்று மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டமைக்காக இவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களில் மூவர் ஹொங்கொங்கையும், ஒருவர் நைஜீரியாவையும் சேர்ந்தவர்களாவர் இவர்களில் இரு பெண்களும் அடங்குவர்.

கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட பிலிப்பீன்ஸ் நாட்டுப் பணிப் பெண் ஒருவர் [illegible] சிங்கப்பூரில் தூக்கில் இடப்பட்டதைத் தொடர்ந்து இரு நாடுகளும் தமக்கிடையி [illegible] துண்டித்துக் கொண்டது தெரிந்ததே (ஐ-7)

### புலிகளின் அடுத்த தாக்குதல் கொழும்பிலாம்

## வடக்கில் இருந்துவருவோர் குறித்து படையினருக்கு முன் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 22

வடபகுதியில் இருந்து கொழும்புக்கு வரும் தமிழர்கள் குறித்து மிகவும் விழிப்புடன் இருக்குமாறு பாதுகாப்புப் படையினருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் தங்கள் அடுத்த தாக்குதலை தலைநகர் கொழும்பில் நடத்த வாய்ப்பு இருப்பதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது.

சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

### நரோமா

## பயணிகளின் பொருள்கள் படையினரால் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஏப். 22

"நரோமா" கப்பல் பயணிகள் தம்முடன் எடுத்து வந்த பற்றறிகள் மற்றும் சைக்கிள் டைனமோ, உதிரிப்பாகங்கள் என்பன திருமலைத் துறைமுகத்தில் வைத்து கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த பயணிகள் இதனைத் தெரிவித்தனர்.

கப்பலின் யாழ்ப்பாணம் வருவதற்காக திருமலைக்குச்

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**BECON**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A/L 97 கலை, வர்த்தகம்

வகுப்பு ஆரம்பமோ

06-05-1995 அன்று

ஆனால் இன்றே இரண்டு பிரிவுகளும் நிறைந்து விட்டதே.

அனேக மாணவர்களின் அன்பான வற்புறுத்தலுக்கிணங்க

3ஆவது பிரிவு

இதுவே இறுதிப் பிரிவும் கூட

30-04-1995 இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(சி/1309)

## அறிவித்தல்

### மே தினம் 1995 - கலந்துரையாடல்

காலம்: 22 - 04 - 1995 சனிக்கிழமை
நேரம்: பி. ப. 3-00 மணி
இடம்: யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

இராணுவ முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள தமிழ் மக்களினது நாளாந்த பிரச்சினைகளை தமது மேலாதிக்க இராணுவ நலன்களுடன் இணைத்துப் பார்க்கும் சிறிலங்கா அரசினது மெய்யான நிலைப் பாட்டை எடுத்துக் காட்டுவதாக இம்முறை மே நாள் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் தற்போதைய அரசியல் நிலை சம்பந்தமான கலந்துரையாடலும் நடைபெறவிருப்பதால் சகல வணிகப்பெருமக்களும், ஊழியர்களும், பொதுமக்களும் கலந்து கொள்ளுமாறு கழகத்தின் சார்பில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். விடுதலைப் புலிகளின் அரசியல்துறை, தொழில்துறையினரும் கலந்து கொள்வார்கள் என்பதையும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிக மன்றம், ஊழியர் சங்கம், நகைத் தொழிலாளர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம் ஆகியவற்றின் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி:
யாழ் வணிகர் கழகம்,
21, மேல்மாடி, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

(சி/1065)

நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக் கழக சனசமூக நிலையம் நடத்தும்

41ஆவது ஆண்டு நிறைவு விழாவின்

கரப்பந்தாட்டக் - கிரிகெட்

(ஓவர்) (7 பேர் — 12 ஓவர்)

சுற்றுப்போட்டி

விண்ணப்ப முடிவு திகதி:- 27-4-95
பிரவேசக் கட்டணம்:- 75/-
விண்ணப்ப படிவம் பெற்றுக்கொள்ளுமிடம்: மாலை 4-30 — 6-30 வரை ஸ்புட்னிக் கழக மைதானம்.
தொடர்பு:- ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம்
செயலாளர்
நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக் கழகம்

[36368]

## நோயாளர் நலன்புரி சங்கம்
## பணிநிலை வெற்றிடங்கள்

யாழ். நகர், பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது கிளை நிறுவனங்களிற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

01. பராமரிப்பு சேவையாளர்கள் (ஆண்/பெண்)
02. காவலாளர்
03. மிதிவண்டி பாதுகாப்பு நிலைய ஊழியர்
04. சிட்டை இலிகிதர்கள்
05. சமையலாளர்

பணியில் இணைய விரும்புபவர்கள் இல: 572, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நடுவப்பணியகத்திற்கு கடமை நேரத்தில் சுயவிவரம், தகுதிச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.

நடுவப்பணியகம்
நோயாளர் நலன்புரி சங்கம்,
572, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

(36367)

# பல்கலைக்கழகப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உயர்மட்டக்குழு நியமனம்

கொழும்பு, ஏப். 22
பல்கலைக் கழகங்களில் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உயர் மட்டக்குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் பிரிவுகளான போதனாசிரியர் குழுமம், போதனாசிரியர் கள்ளாத பணியாளர், மாணவர்கள் ஆகியோரின் பிரச்சினைகளை ஆராயுமாறு குழு பணிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் மேற்குறிப்பிட்ட பிரிவுகளுடன் கலந்தாலோசனை செய்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கேற்ற தகுந்த தீர்வுகளை கொண்ட விதப்புரைகளை ஒரு மாத காலத்துள் சமர்ப்பிக்குமாறு இக்குழுவை ஜனாதிபதி பணித்துள்ளார்.

கடற்தொழில் நீர்வள அமைச்சர் இந்திக குணவர்த்தன தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவில் இளைஞர் விவகார விளையாட்டு துறை கிராம அபிவிருத்தி அமைச்சர் எஸ். பீ. திஸாநாயக்கா பிரதி உயர்கல்வி அமைச்சர் கலாநிதி விஸ்வ வர்ணபால, கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் எம். டீ. டீ. பீரிஸ், ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பி. ஏ. சுமண திஸ்ஸ, பதுளை மாவட்ட எம். பி. திலான் பெரேரா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இதே வேளை 10 வீத சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் கடந்த புதன்கிழமை முதல் தமது கல்வி சாரா பதவிகளை துறந்துள்ளது.

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் இது தனது கோரிக்கைகளை முன்வைத்திருந்தது.

இதன்படி 10வீத சம்பள அதிகரிப்பும் வேறுபல சலுகைகளும் வழங்கப்படும் என, 93ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இதனை அமுல் செய்யும்படி ஜனாதிபதி, கல்வி உயர் கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடப்பட்டும் அவர்கள் சாதகமான பதில் எதையும் வழங்கவில்லை.

இதனை அடுத்தே எட்டு தேசிய பல்கலைக்கழகங்களினதும் விரிவுரையாளர்கள் அனைவரும் தமது கல்வி சாரா பதவிகளான பீடாதிபதி துறைத்தலைமை விடுதி மேற்பார்வையாளர் போன்ற நிர்வாகப் பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

இது குறித்து தொடர்ந்தும் மௌனம் சாதிக்கப்பட்டால் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் ஒன்று பற்றி தாம் முடிவெடுக்க வேண்டி ஏற்படும் என மேற்படி ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ஒ-14)

# ஜி. சீ. ஈ. பரீட்சையில் சித்தி பெறாத மாணவருக்கு முறைசாராக் கல்வி

## கல்வி அமைச்சு திட்டம்

கொழும்பு, ஏப். 22
ஜி.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சையில் சரியான முறையில் சித்தியடையாத மாணவர்களுக்கு முறைசாராக் கல்வி வழங்கப்படவுள்ளது. இதற்கென திறந்த பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படும்.

இதே வேளை பாடசாலைக்கு செல்லாதோருக்காகவும், முதியோருக்காகவும் எழுத்தறிவு வகுப்புக்களும், சமுதாயப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படும்.

இந்தத் திட்டங்களின் கீழ் முதியோர் கல்வி நிலையங்கள் நூறும், சமுதாயப் பாடசாலைகள் அறுபதும் நிறுவுவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அத்துடன் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கெனவும் தொழில் நுட்ப, தொழில்சார் கற்கை நெறிகளும் விரிவுபடுத்தப்படவுள்ளன.

இதற்காக அறுபத்தெட்டு தேசிய பாடசாலைகளில் மேற்படி கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. [ஒ-7]

## நீண்ட காலம் காத்திருப்பதால்

# கல்வி கற்பதில் பல்கலை மாணவர் ஊக்கம் குறைந்து காணப்படுகின்றனர்

## விஞ்ஞானசங்க புதிய தலைவர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஏப். 22
"பல்கலைக்கழகப் பிரவேசத்துக்காக, தகுதி பெற்ற பின், நீண்டகாலம் காத்திருப்பதால் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் கல்வி கற்பதில் ஊக்கம் குறைந்துள்ளது."

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். மகேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் புதிய தலைவராகப் பதவியேற்று அவர் தலைமை உரையை நிகழ்த்தினார்.

சங்கத்தின் கடந்த ஆண்டுத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் "ஜி. சீ. ஈ. [சாதாரணம்], ஜி. சீ. ஈ. [உயர்தரம்], பல்கலைக்கழகப் பட்டப் பரீட்சைகள் ஆகியவற்றில் மாணவர்களின் சாதனை" என்ற தலைப்பில் அவருடைய உரை அமைந்தது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் கடந்த வியாழன் நிகழ்த்தப்பட்ட புள்ளி விவரங்களுடன் கூடிய அவரின் ஆர்ந்தமைந்த உரையில் அவர் மேலும் கூறியதாவது:

பாடசாலைகள், ரியூட்டரிகள் ஆகியவற்றின் போதனைக்கும் பல்கலைக் கழகத்தின் போதனைக்கும் இடையில் வித்தியாசம் உண்டு. இதனால் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் போதனையைப் புரிந்து கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். மேலும், பல்கலைக்கழக மாணவர்கள் பரவலான வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள ஊக்கம் அளிக்கப்படவேண்டும் என்றார்.

பேராசிரியர் மகேஸ்வரனும் பேராசிரியர் சிவஞானசுந்தரமும் மங்கள விளக்கேற்றினார்கள். யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் கே. சித்திரவடிவேலு நன்றியுரையை நிகழ்த்தினார்.

விஞ்ஞான சங்கம் நடத்திய விஞ்ஞானப் பொது அறிவுப் போட்டி, விஞ்ஞானப் பேச்சுப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் இந் நிகழ்வின் போது வழங்கப்பட்டன. [க]

# சுதந்திரத்துடன் வாழவேண்டும் என்ற உணர்வு எமக்கு ஏற்பட வேண்டும்

## அன்னை பூபதி நினைவுக் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், ஏப். 22
தனித்துவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழவேண்டும் என்ற உணர்வு எமக்கு ஏற்பட வேண்டும். மாயைகளில் இருந்து விடுபட்டு வாழ வேண்டும். இன்றைய போராட்டம் இதற்காகவே நடக்கிறது.

இவ்வாறு அன்னை பூபதி நினைவு தினக் கூட்டத்தில் பேசிய செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி கூறினார்.

வலிகாமம் அரசியல்துறையின் சார்பில் இளங்கலைஞர் மண்டபத்தில் அன்னை பூபதியின் ஏழாவது ஆண்டு நினைவு நாள் விழா நடைபெற்றது.

வலிகாமம் கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. கு. திருக்குமரன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

செல்வி ஜனனி மேலும் பேசும்போது கூறியதாவது;

முன்னைய சிங்களத் தலைவர்கள் போலன்றி சந்திரிகா முற்றிலும் மாறுபட்டவர். தமிழினத்தின் உரிமைகளை வழங்க விரும்பும் தலைவர் என்று உலகம் எண்ணத்தக்கதாக தன்னைக் காட்டிக் கொண்டு அவர் தமிழினத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இந்தப் போலி முகத்திரையைக் கிழிக்கும் வகையிலேயே திருமலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தமிழர்களின் இரத்தம் வேண்டும் என்பது போன்ற [illegible] சேர்த்து சிங்கள மாண [illegible] சத்தை வளர்த்துவரும் மகாவம்சம் கூறும் பொய்யான வரலாறுகளுக்கு எதிராக தமிழர்களின் உண்மை வரலாறுகள் எழுதப்பட வேண்டும்.

இந்த மண்ணின் விடிவுக்காக தம்மை அர்ப்பணித்த அன்னை பூபதி மற்றும் மாவீரர்களின் தியாகங்கள் எழுதப்பட வேண்டும்

— இவ்வாறு கூறினார்.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் பேசும்போது கூறியதாவது-

தனக்கு ஏற்பட்ட இன்னல்கள் தமிழினத்துக்கு ஏற்படக் கூடாது என்பதில் உறுதியாக இருந்து இந்தியப் படைகளுக்கு எதிராக அகிம்சையில் அந்த நாடு கொண்டிருந்த போலித் தன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டிய அன்னை பூபதி தமிழினத்தின் வரலாற்றுச் சிறப்புக்குக் காரணமான தியாகத் தாயாக விளங்குகிறார் என்று கூறினார்.

மட்டக்களப்பு அம்பாறை தொடர்பாளர் திரு. யோவான் புலிகளின் குரலைச் சேர்ந்த வின்சன் உட்படபலர் [illegible]. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [ஒ-111-7]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

பட்டப்பின் டிப்ளோமா பொது நிர்வாகம் 1ம் அரையாண்டுப் பரீட்சை 1994

1995-04-25 அன்று நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறவிருக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்

(சி/1066)

# தமிழீழ சட்டக் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 22
தமிழீழ சட்டக்கல்லூரியின் 95—96ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சீ. ஈ. உயர்தரப்பரீட்சையில், இரண்டு பாடங்களில் திறமைச்சித்திஉட்பட 3 பாடங்களில் சித்தியடைந்த—

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலம் தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி பெற்ற—

19 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை நீதி நிர்வாகத்துறையின் நடுவப் பணியகங்களிலும் தமிழீழ மாவட்ட நீதிமன்றுகளின் செயலகங்களிலும் பெற முடியும்.

விண்ணப்ப முடிவு 6ஆம் மாதம் 30ஆம் திகதி ஆகும். (ஒ-14)

## கடந்த வருடம் உலகம் முழுதும்

# இளம்பிள்ளைவாதத்துக்கு 6,241 பேர் பாதிப்பு

கொழுழுபு, ஏப். 22
கடந்த வருடம் மட்டும் உலகம் முழுவதிலுமுள்ள 6 ஆயிரத்து 241 பேர் இளம் பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இளம்பிள்ளைவாத நோய்க்கு உட்பட்டவர்களில் பெரும்பாலானோர் இந்தியா பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

எனினும் இலங்கையில் கடந்தவருடம் எவருமே இளம்பிள்ளைவாத நோய்க்கு உட்படவில்லை.

உலகம் முழுவதும் வாழும் எண்பது சதவீதமான குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து கொடுக்கின்ற போதும் இலங்கையில் பிறக்கும் சகல குழந்தைகளுக்குமே தடுப்புமருந்து கொடுக்கப்படுகிறது.

இளம்பிள்ளை வாத நோய் ஒரு வகை வைரசினால் ஏற்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

## பெண்களுக்கான தாச்சி சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 22
யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படும் பெண்களுக்கான தாச்சி சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (இ)

## புலிகளின் குரல் வானொலியில்

**22 - 04 - 1995**
**சனி இரவு**

- ★ 8-02 — புரட்சிக் குரல்
- ★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-20 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — 19-4-95 அதிகாலை வேளை திருமலைத் துறைமுகத்தில் கடற்கரும்புலிகள் நடத்திய போர்க்கப்பல்கள் தகர்ப்பின் வெற்றி நாளையொட்டிய சிறப்பு நிகழ்ச்சி

**23 - 04 - 1995**
**ஞாயிறு காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**சனி மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
- ★ 5-30 — அறிவியல் வினாடி வினா
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — பாமாலை
- ★ 6-15 — என் தெரிவு

## ஐ.தே.க. உறுப்பினர் கைது

கொழும்பு, ஏப். 22
புத்தளம் பிரதேசசபையின் உறுப்பினரான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பெனடிக்ற் என்பவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மரங்களைக் கைப்பற்றச் சென்ற வனபரிபாலன அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

அடுத்தமாதம் 2ஆம் திகதி வரை அவரை தடுப்புக்காவலில் வைக்குமாறு புத்தளம் நீதிவான் உத்தரவிட்டார்.

## மீன் விலை மீண்டும் உயர்வு

வடமராட்சி, ஏப். 22
யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பிரதான சந்தைகளில் நேற்றையதினம் மீன் வகைகளின் விலை உயர்ந்திருந்தது.

கடல் வலயத் தடைச்சட்டம் மீண்டும் அமுலுக்கு வந்துள்ளதால், மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதை அடுத்தே மீனின் விலை திடீரென அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (ஒ-173)

## சேஷனுக்கு கௌரவம்

புதுடில்லி, ஏப். 22
1995 ஆம் ஆண்டின் நேர்மையான புருஷர் என இந்தியத் தேர்தல் ஆணையாளர் ரி. என் சேஷன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கலாப் இன்டர் நஷனல் என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்வில் இந்த கௌரவத்துடன் 5 லட்சம் ரூபாபணமும் தங்கப்பதக்கம் ஒன்றும் அவருக்கு வழங்கப்பட்டது (ஒ-14)

## 9 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

நாளை 23-04-95

அஞ்சல் தொலை தொடர்பு இளைப்பாறிய சேவையாளர் நலன்புரிக் கழகம்

மேற்படி கழக 9 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் 23-04-95 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயம் [ஓ. எல். ஆர்] ஜெறோ மண்டபத்தில் நடைபெறும். அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

அங்கத்தவராக சேரத் தகுதியுடையோரை அழைத்து வரவும்.

நன்றி

கோ. தியாகராஜா — தலைவர்.
அ. யோசெப் — செயலாளர்

25, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

[36371]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தையின் போது தாக்குதல் நடப்பது உலக நாடுகளில் சகஜம்

## தென் ஆபிரிக்கா ஓர் உதாரணம் என்கிறார் விக்ரர்ஐவன்

கொழும்பு, ஏப் 22
சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது தாக்குதல் சம்பவங்கள் நடைபெறுவது உலக நாடுகளில் சகஜம். தென் ஆபிரிக்கா இதற்கு நல்ல ஓர் உதாரணம்.

''ராவய பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவன் நேற்று ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியின் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் கைகளில் ஆயுதங்கள் உள்ளன. அதே போலவே இராணுவத்தினரது கைகளிலும் ஆயுதங்கள் உள்ளன. யுத்தத்தை நடத்துவது அவர்களே.

யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும். இன்றேல் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு சமாதானத்தை உருவாக்க வேண்டும்.

யுத்தத்தை நடத்தி விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் நோக்கிலேயே முன்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த முயற்சி வெற்றியளிக்வில்லை. இதன் விளைவாக வடபகுதி மக்கள் மேலும் மேலும் துன்பங்களுக்கு உள்ளானார்கள். சிங்கள, தமிழ் மக்களிடையே விரக்தி உருவானது.

ஆனால் சந்திரிகா தலைமையிலான அரசு வேறுவிதமாகச் சிந்தித்தது. அந்தச் சிந்தனைதான் பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது அதாவது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு தீர்வினை காண்பது.

ஆனால் தற்போது விடுதலைப் புலிகளின் நடவடிக்கையினால் நிலைமை மோசமடைந்துள்ளது. இருப்பினும் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை வைத்து அதை மூன்றாவது ஈழ யுத்தத்தின் ஆரம்பம் என நான் தனிப்பட்ட முறையில் கருதவில்லை.

இதை அரசுகூட ஏற்றுள்ளது. இது ஒரு தற்காலிகப் பின்னடைவு மாத்திரமே என அரசு தெரிவித்துள்ளது.

அரசு தனது சமாதான முயற்சிகளை இன்னும் கைவிடவில்லை எனத் தெரிவித்துள்ளது.

சமாதானம் உருவாக வேண்டுமெனில் முதலில் சம்பந்தப்பட்ட இருதரப்பாரிடமும் பரஸ்பர நம்பிக்கை ஏற்படவேண்டும்.

உலகில் பல நாடுகளில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுவந்த வேளைகளில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

உதாரணமாக தென் ஆபிரிக்காவில் சமாதானத்தை எட்ட கடும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்த வேளையில் தொடர்ந்து அசம்பாவிதங்கள் ஏற்பட்டன. மேலும் சமாதானம் எட்டப்பட்ட கடைசி நேரத்திலும்கூட மிகப் பயங்கரமான தாக்குதல்கள் இடம்பெற்றன.

தேர்தல் நடந்த வேளையில் ஏற்க்குறைய எல்லா நகரங்களிலும் குண்டுகள் வெடித்தன. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இருப்பினும் மக்கள் எங்களுக்குத் தேர்தல் வேண்டாமெனக்கூறி வீட்டுக்குத் திரும்பவில்லை. தங்கள் கடமையை நிறைவேற்றினார்கள். இவ்வாறான வரலாற்றுச் சம்பவங்கள் வழமையாகச் சுலபமாக உருவாகுவதில்லை.

இப்படி அவர் கூறினார். (இ-10)

## பதுங்கு குழிகளை அமைக்க மீண்டும் மக்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22
பதுங்குகுழிகளை அமைக்கும் வேலைகள் மீண்டும் யாழ் குடாநாட்டின் பல வீடுகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல தூர்ந்துபோன பதுங்கு குழிகளையும், குப்பைபோட்டு மூடப்பட்ட பதுங்குகுழிகளையும் பலர் மீளப்புனரமைப்பு செய்வதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் காலத்தில் இராணுவ முகாம்களில் இருந்து மக்கள் குடியிருப்புகள் மீது ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என மக்கள் பீதியடைந்துள்ளனர்.

அதை அடுத்தே பதுங்குகுழிகளை அமைக்க மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். [ஒ-4]

### உடம்பில் தீ பரவிய

## அண்ணனை காக்க முயன்ற தம்பி எரிந்து பலியானார்

யாழ்ப்பாணம், ஏப். 22
அண்ணன் மீது பற்றிய தீயை அணைக்க முற்பட்ட தம்பி எரிகாயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

கடந்த 10ஆம் திகதி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பங்குனித்திங்கள் உற்சவத்தின் போது பறவைக் காவடி எடுத்த அண்ணனின் வேட்டியில் கற்பூரச்சட்டியிலிருந்து எழுந்த நெருப்பு பற்றிக்கொண்டது.

தீயை அணைக்க முற்பட்ட தம்பியின் வேட்டியிலும் தீ பற்றியதால் இருவரும் காயமடைந்திருந்தனர்.

யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர்களில் தம்பி மரணமானார் அண்ணன் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினார்.

சரசாலை வடக்கைச் சேர்ந்த சற்குணசிங்கம் தசகுமாரன் (வயது 19) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (ஒ.14-15)

### மேற்காசிய நாடுகளில்

## ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டும்

கொழும்பு, ஏப். 22
மேற்காசிய நாடுகளில் ஒரு லட்சம் இலங்கையருக்கு கூடியசம்பளம், வசதிகளுடனான வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் லெபனான் குவைத் ஆகிய மேற்காசிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் மஹிந்தராஜபக்ஷ தலைமையிலான தூதுக்குழு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்நாடுகளின் உள்ள வேலைவாய்ப்பு முகவர்களுடன் இதற்கான ஒப்பந்தங்கள் செய்யட்பட்டுள்ளதாகவும் இலங்கையிலுள்ள உள்ளூர் வேலைவாய்ப்பு முகவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அல்லது அனுமதிபெற்ற அரசாங்க முகவர்களுடாகவே இலங்கையர்கள் அனுப்பப்படுதல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-14)

## பளைப்பகுதியில் மலேரியா; வீடுகளுக்கு சென்று சிகிச்சை

சுகாதார திணைக்கள மலேரியாத் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் பளைப் பகுதியில் மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்குச் சென்று காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களைப் பரிசோதித்து உரிய மருந்து வகைகளை வழங்கி வருகின்றனர்.

பளைப் பகுதியில் காய்ச்சலின் தாக்கம் இன்னமும் குறையவில்லை என்பதை தினமும் பளை வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மூலம் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

கடந்த திங்கட்கிழமை பளை வைத்திய சாலைக்கு பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் வந்ததால் பலர் சிகிச்சை பெறாமல் வீடு திரும்ப நேரிட்டது. (ஒ-117)

### மூளை வளர்ச்சி பாதிப்புற்ற

## பிள்ளைகளை பராமரிக்க 'ஆர்க்' இல்லம் விருப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 22
மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டு வலுவிழந்து இருக்கும் சிறுபிள்ளைகளை தமது பராமரிப்பில் கொண்டு வந்து சேர்க்குமாறு உடுவில் 'ஆர்க்' இல்ல அருட் சகோதரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவ்வாறானவர்களின் வாழ்வு வளம்மிக்க தாகக் கூடிய வகையில் அவர்களுக்குப் பயிற்சியளித்து சுயதொழில் வல்லவர்களாக்கி விட தமது பராமரிப்பில் சேர்க்குமாறே வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுவிலில் இயங்கிவரும் இந்த வலுவிழந்தோர் மூளை வளர்ச்சி குறைந்தோர் பராமரிக்கும் இல்லத்தில் தற்போது 50 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் இவர்களில் 20 பேர் விடுதியில் தங்கியிருந்து பயிற்சி பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## அமைச்சர் நியூஸிலாந்து பயணமானார்

கொழும்பு, ஏப். 22
நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் 27ஆம் திகதி வரை நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள ஆசிய பசுபிக் சுற்றுலா அமைப்பின் 44 ஆவது மாநாட்டை ஆரம்பித்து வைத்து, அதில் கலந்து கொள்வதற்கென தொடர்பு சாதன சுற்றுலாத்துறை விமானசேவைகள் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று முன் தினம் நியூஸிலாந்து புறப்பட்டுச் சென்றார்.

இம் மாநாட்டில் 80 க்கும் அதிகமான நாடுகளின் 2 ஆயிரம் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-14)

## இடைக்கால கொடுப்பனவை நிறுத்த உத்தரவு

கொழும்பு, ஏப். 22
கடந்த வருடம் ஜூலை மாதம் முதல் வழங்கப்பட்டு வந்த அரசாங்க உயர் அதிகாரிகளுக்கான இடைக்கால கொடுப்பனவை நிறுத்துமாறு பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கை மூலம் உத்தரவிட்டுள்ளது.

இந்த இடைக்கால கொடுப்பனவு கடந்த ஜூலை முதல் வழங்கப்பட்டுவந்தது.

## மெய்வல்லுநர் போட்டி

வலி. மேற்கு, ஏப். 22
வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிறும் மறு நாள் திங்களும் நடைபெறவுள்ளது.

வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில நடைபெறவுள்ள இந்த வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் கலந்து கொள்கின்றார். [ஒ-175-12]

## இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22
யாழ் மாவட்ட பிரதேச செயலர்கள் உள்ளூர்திணைக்கள தலைவர்கள் அரச கூட்டுத்தாபன தலைவர்கள் ஆகியோருடனான சம்பள ஆணைக்குழுவின் தனிநபர் ஆணைக்குழுவின் திரு. சி. லோகேஸ்வரனுடைய சந்திப்பு இன்று சனிக்கிழமை காலை9 மணிக்கு யாழ் செயலக மண்டபத்தில நடைபெறும் மேலே குறிப்பிடப்பட்டவர்கள் தங்கள் அலுவலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி, வெற்றிடங்கள், மேலதிகம் போன்ற விவரங்களுடன் இச்சந்திப்பில் கலந்து கொள்ள வேண்டும் என்று யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார். (ஒ 14)

## யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

யெகோவாவின் சாட்சிகளின் ஒருநாள் மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு ஆனைப்பந்தி மெதடிஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

பிற்பகல் 2-30 மணிக்கு சத்தியத்துக்கு சாட்சி பகிருதல் —எது எதை நிறைவேற்றுகிறது என்ற தலைப்பிலான பேச்சு இடம்பெறும்.

## மாணவரின் சீருடைகள் கடைகளில் தொங்குகின்றன

### பிரதிப் பணிப்பாளர் கூறுகிறார்

வலிதெற்கு, ஏப். 22
''மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைகள் தனியார் வர்த்தக நிறுவனங்களில் விற்பனைக்காக தொங்கவிடப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது. அதிபர்கள் சரியான ஆதாரங்களுடன் உரிய மாணவர்களுக்கு அவற்றை வழங்கத் தவறினால் அவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.''

உடுவில் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க இரத்தினராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராமநாதன் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற உடுவில் கல்விக்கோட்ட அதிபர்களுக்கான கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

மாணவர்களுடைய சீருடை வழங்கலில் மோசடிகள் நடைபெறக்கூடாது. உரிய மாணவர்களுக்கு சீருடைகள் அவர்களின் கையொப்பம் பெற்று வழங்கப்படவேண்டும்

சீருடைகளை பெறும் மாணவர்களே அவற்றை விற்பனை நிலையங்களில் கொடுத்திருக்கலாம் —

எப்படி இருப்பினும் அதிபர்கள் சீருடை மைக்கற்றுக்களை நீக்கி வழங்குவது நல்லது —

சீருடை வழங்கியதற்கான ஆவணங்களை அலுவலகத்தில் ஒப்படைப்பதுடன், மிகுதியான சீருடைகளையும் —

தேவைப்படும் சீருடைகளின் எண்ணிக்கை விவரத்தையும் உடனடியாக சமர்ப்பிக்குமாறும் திரு. இரத்தினராசா அங்கு பேசுகையில் தெரிவித்தார். [ஒ-152]

### தென்மராட்சிப் பகுதியில்

## கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை

தென்மராட்சி, ஏப். 22
தென்மராட்சிப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் நாய்கள் விரைவில் அழிக்கப்படவுள்ளன. நாய்களை கொன்றொழிக்கும் மருந்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளது.

விரைவில் தென்மராட்சிப் பகுதியின் அனைத்து இடங்களிலும் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

தற்போதைய வெப்பம் காரணமாக நாய்களுக்கு விசர்நோய் வராமல் தடுப்பதற்காக கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## தமிழ் இசை உரை அரங்கில்

யாழ்ப்பாணம், ஏப். 22
கன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய உற்சவத்தை பொட்டி அகில இலங்கைத் திருமுறைமன்ற அனுசரணையுடன் நடைபெற்றுவரும் திருநெறிய தமிழ் இசை உரை அரங்கில் இன்று சனிக்கிழமை 4ஆம் திருமுறை இடம் பெறும்.

இசையாளராக திரு. சி. தில்லைமணியும் உரையாளராக திரு குமாரசாமி சண்முகநாதனும் கலந்துகொள்வர். (ஒ-14)

## வலி. மேற்கில் நடமாடும் செயலக சேவை

வலி மேற்கு, ஏப் 22
வலிகாமம் மேற்கு பிரதேச செயலக ஐந்தாவது நடமாடும் செயலக சேவை சுழிபுரம் கிழக்கு, பண்ணாகம், பனிப்புலம் ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும்இணைத்துஇன்று சனிக்கிழமை சுழிபுரம்கிழக்கு அ. மி. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திரு கா. சந்திரராசாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நடமாடும்செயலக சேவையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு க. பொன்னம்பலம் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-175-28)




கலை ஊடக இணைய

முதலாவது ஆண்டு பொதுச்சபைக் கூட்டமும் அங்கத்தவர் தெரிவும்

25-02-95 இல் நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட கலை ஊடக இணைய பொதுச் சபைக் கூட்டமும், நிர்வாக உறுப்பினர் தெரிவும் 23-04-95 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

குறிப்பு:
கூட்டத்திற்கு வருகை தரும் உறுப்பினரது வருகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட இருப்பதால் இத்துறை சார்ந்த அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி.

செயலாளர்,
கலை ஊடக இணையம்

(சி-1062)



இரண்டாம் ஆண்டிலும் நீங்காத நினைவலைகள்



மலர்வு: 08 – 08 – 1939
உதிர்வு: 13 – 05 – 1993

அமரர் இராசதுரை சடாட்சரம்
(உரிமையாளர் விநோ நகைப் பூங்கா)

திதி: 22 – 04 – 1995

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே அப்பா!
அன்பால்! அறிவால்! பண்பால்! பாசத்தால்!
உங்களை உருக்கி! எங்களை ஆளாக்கி!
எங்களிற்கு எல்லாம் நல்வழி காட்டினீர்களே அப்பா!
பாரினில் நாம் வளமுடன் வாழ பார்த்திருப்பீர்கள் என்றிருந்தோம்.
பாதியினில் உங்களை நோய்தான் பிரித்ததோ அப்பா
நேசமுடன் ஒருவார்த்தை கூறாமல் காலனவன்
கவர்ந்ததற்கு காலம் தான்செய்த மாயம் என்ன?
ஆண்டிரண்டு ஆனாலும்! ஆறவில்லை! எம்துயரம்!
எம் உள்ளத்திலே வீற்றிருக்கும் அன்புத்தெய்வமே!
நீங்கள் காட்டிய வழியில் நாம் தொடர்ந்து வந்து
உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

[36356]


## பண்டிதமணியின் கருத்துக்கள் காலவெள்ளத்தில் அழியாதவை

### 'சைவ நற்சிந்தனை' வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஏப் 22
''பண்டிதமணியின் சிந்தனைகள் என்றும் எல்லோருக்கும் நல்வழி காட்டத் தக்கவை அவருடைய கருத்துகள் கால வெள்ளத்தில் அழியாதவை''

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 'சைவ நற் சிந்தனை' நூலை அறிமுகம் செய்து உரையாற்றிய போது சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு தெரிவித்தார்.

'சைவ நற் சிந்தனை' நூலை ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தமது தாயாரான திருமதி அருணாசலம் இரத்தினம் நினைவாக வெளியிட்டுள்ளார்.

இந் நூலில் [illegible] வம் என்று பண்டிதமணி வலியுறுத்துகின்றார் [illegible] பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் இந்த நூல் அறிமுக விழாவுக்குத் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில் ''தமது எழுத்தாலும் பேச்சாலும் யாழ்ப்பாணக்கலாசாரம் கந்த புராண கலாசாரம் என்பதை நிறுவியவர் பண்டிதமணி கந்தபுராண கலாசாரம் என்ற தலைப்பைக் கொண்ட கட்டுரை உட்பட பதினைந்து கட்டுரைகளை ஒன்று சேர்த்துப் பண்டிதமணியின் அன்புமாணவர் ஆசிரியமணி பஞ்சாட்சரம் [illegible] யீட்டுருப்பதும் மிகப்பொருத் [illegible] செய்யப்பட்டதன் மூலம் குருசிட்டபாரம்பரியம் இம்மண்ணில் பேணப்படுகின்றது மாதா, பிதா, குரு, தெய்வம், பிதிர் வணங்குவதற்கு உரியவர்கள்'' என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முதுநிலை விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராசா தமது நூல் அறிமுக உரையில் 'பண்டிதமணியின் பேச்சும் எழுத்தும் பாலர் முதல் முதியவர் வரை அனைவருக்கும் பயன்படத்தக்கவை.

அறிவுரை நிரம்பிய நூல்களை மக்கள் மத்தியிலே பரப்ப வேண்டும். அதற்குப் பண்டிதமணியின் ''சைவநற் சிந்தனைகள்'' பெரிதும் உதவும் என்றார். (அ)


ஈராண்டு பிரிவுத் துயரில்

S. தருமராசா [செந்தில்]

த. வதனா

பிறப்பு: 1959 – 04 – 18
பிறப்பு: 1969 – 01 – 29
இறப்பு: 1993 — 04 — 22

ஈராண்டு சென்றாலும் எம் நெஞ்சு மறக்காது
அன்பான தம்பதியாய் ஒன்றாக மறைந்தீர்கள்
ஈராண்டு சென்றுவிட்ட மறக்கமுடியாத நாளில்
நீங்காத நினைவுகளாய் நீங்கள் திகழ்கிறீர்கள்.

— கந்தசாமி குடும்பத்தினர்.

ஆஸ்பத்திரி வீதி,
சோண்டாவில் கிழக்கு,
சோண்டாவில்.

(சி-1064)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

லவர் இனிக்கோழிக்குஞ்சுகள், சோனி றேடியோ, டெக்செற் விற்பனைக்குண்டு. தொடர்பு: என். லக்ஷமாலா, பாலஷ்யூர். [36343]

நெல்லுடைக்கும் No. 7 அல்லர் பெட்டியுடன், மர வேலை செய்யும் பட்டறை, C 90, எக்கநோபவர் மோட்டார் சைக்கிள் (மண்ணெண்ணெய் பாவிக்காதது) லான்ட் மாஸ்ரர் பெட்டியுடன் விற்பனைக்குண்டு. "யோகா இல்லம்", இல. 30, பலாலி வீதி, திருநெல்வேலி. [வசந்தம் மொத்த கொள்வனவு நிலையம் முன்பாக] [36284]

ஒன்றரை மாதங்கள் நிரம்பிய பூச்சி அகற்றிய அழகிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இல. 222, தெல்லிப்பழை வீதி. [வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகில்] சித்தன்கேணி [36285]

சுன்னாகச் சந்தையின் தெற்கு பக்கத்து வீதியிலுள்ள பிரதான வாசலுக்கு முன்பாக 3 கடைகள் உடனடியாக விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்க்கலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: த. நந்தகுமார் பே/பா, சிவபெருமான் ஞானியார் வளவு, உடுவில். [8128]

இலங்கை பறாமா இனத்தின் குஞ்சுகளும் தலையில் பெரிய கொண்டையும் காலில் இறகுகளும் உடைய குஞ்சுகளும்விற்பனைக்குண்டு. தாராக் குஞ்சுகளுக்கும் தொடர்பு கொள்ளவும்: N ரமேஷ். பே/பா K நித்தியானந்தன் [வட்டுக் கோட்டை வீதி], சித்தன்கேணி [36347]

Red Face African லவ் பேட்ஸ் Laying Point, நீலம், மஞ்சள், பச்சை நிறங்கள் பெற்றுக் கொள்ளலாம் T S குமார் மிருக வைத்தியசாலை அருகில் சிரணி, சண்டிலிப்பாய் [36349]

### வீடு விற்பனைக்கு

இல. 185/8, இல்லவர் ஒழுங்கை, வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: திருமதி அருள் அன்னராஜா, இல 199/1, இலவர் ஒழுங்கை, வண்ணார் பண்ணை. (36341)

### தேவை

பெண்களின் ஆடைகள் தைப்பதில் நன்கு அனுபவம் உள்ள பெண்கள் தேவை. நேரில் வரவும். சக்தி தையல் நிலையம், இல. 739A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [36·32]

எமது ஸ்தாபனத்திற்கு தச்சவேலை செய்வதில் அனுபவம் வாய்ந்தவர்களும், படம் பிறேம் செய்வதில் முன் அனுபவம் உள்ளவர்கள் இவர்களுக்கு உதவியாளர்களும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்: யாழ் நுகர்வோர் காட்சியகம், சியன் வடக்கு வீதி சந்தி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [36340]

பனேடியன மெஷினில் வேலை செய்யும் அனுபவமுள்ளவர் தேவை நேரில் சமுகந்தரவும். தேனி அச்சகம் 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (36325)

### பாலர் ஆசிரியர்

பாலர் ஆசிரியர் பயிற்சி ஆரம்பம் 1995-04-29 சனிக்கிழமை க. பொ. த. (சா/த) கணித தகைமை சனி, ஞாயிறு கற்க வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [36345]

### தவறிவிட்டது

19-4-95 அன்று நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் இரண்டு பிரயாணப் பைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கருணை உள்ளங்கொண்டு யாழ். மரியன்னை பேராலயப் பங்குத் தந்தையிடம் ஒப்படைக்கவும். நன்றியுடன் சன்மானம் வழங்கப்படும். யாழ் மரியன்னை பேராலயம், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம். (36353)

### விலங்கியல் - I II

A/L வகுப்புக்குரிய விலங்கியல் - I, II மாதிரி வினாத்தாள்கள் வெளிவந்துவிட்டன. தொகுப்பு: எஸ். செல்வநாயகம், வெளியீடு: சிறிசுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், இல 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (36344)

### மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 43 வயது வங்கியாளருக்கும், 30 வயது T.A.க்கும், 35 வயது ஆசிரியருக்கும், குற்றமுள்ள 38 வயது என்ஜினியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [36228]

### வகுப்புக்கள்

O/L கணிதம், ஆங்கிலம் விசேட சித்தி பெறுவதற்கு ஆரம்பத்திலிருந்து (ஆண்டு 9, 10 உட்பட) கற்பிக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: கனகரட்னம், இல. 280, ஆடியபாத றோட், நல்லூர், கல்வியங்காடு. (36357)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர் பலகை உண்டு. [36361]

### புலமைப் பரிசில் - 1995

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கேற்ப பயிற்சி வினாத்தாள்களும், வீட்டிலிருந்தபடியே படிக்க வசதியாக வழக்குவிப்பு பயிற்சிகளும் விடைகளுடன் எம்மிடம் / புத்தக நிறுவனங்களில் / தபாலில் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8484]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann White இரண்டு கிழமை வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், Priam Broiler குஞ்சுகள் விற்பனைக்குண்டு நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (26362)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 05 — 1917

மறைவு: 18 — 04 — 1990

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

இல்லத்தரசி

### திருமதி பொன்னம்மா கந்தையா

திதி: 22—04—1995

எங்கள் அன்புத்தெய்வமே! இல்லத்தரசியே எம்மை எல்லாம் அன்புடனும் பாசத்துடனும் பண்புடனும் வாழவைத்த தெய்வமே உங்கள் அன்பு தவழும் இனிய முகம் எம் கண்ணில் தெரிகிறதே.

அம்மா, அம்மா, நீங்கள் எங்களை எல்லாம் விட்டு பிரிந்து ஐந்தாண்டு சென்றாலும் இன்னும் எம் கண் முன்னே நடமாடும் தெய்வமாககாட்சி தருகிறீர்கள் அம்மா. எங்கள் இதயத்தில் பசுமையாக நீங்காது நிலைத்திருக்கும்!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கிறோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

5ஆம் மைல்போஸ்டுலேன்,
மானிப்பாய். (8473)

## விண்ணக வாழ்வில் 41 ஆம் நாள்



மண்ணில்: 28 — 09 — 1938

விண்ணில்: 15 — 03 — 1995

### ஆசீர்வாதம் சூசைதாஸ்

[துரைராஜசிங்கர்]

[போயிட்டி, இளவாலை]

"என் சீவியத்தில் என்னை நேசித்தவர்களே, என் மரணத்திலும் எனக்காக மன்றாடுங்கள்"

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய், எங்கள் எல்லோரினதும் நெஞ்சங்களிலும் வாழ்ந்து எங்கள் வாழ்வுக்கு வழி காட்டியாக விளங்கிய நீங்கள் எங்களை விட்டு பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது.

இவரது ஆத்ம சாந்திக்காக 24 - 04 - 95 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்;
— குடும்பத்தினர்

ஆ. தேவராஜசிங்கம் (சகோதரன்),
களவடி, ஆனைக்கோட்டை. [8106]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

### O/L DAY CLASSES

[காலை 8-30 மணி முதல் பி. ப. 2 மணி வரை]

புதிய 4ஆம் பிரிவு

ஆரம்பம்: 24 - 4 - 1995

(திங்கள்) காலை 8-30 மணி.

★ எமது வழமையான தனித்துவம் மிக்க யாழ் முன்னணி ஆசிரியர் குழு

[சி-1000]

## பயிற்சி வினாத்தாள்

[ விடைகளுடன் ]

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10 O/L வகுப்புகளுக்குரிய எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. 3ஆம் தொகுதி வினாத்தாள்களும் புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் புதிய பாடத்திட்டத்தின்படி 5ஆம் தொகுதியும் 23-04-95 ஞாயிறு வெளிவருகின்றன பிரபல கல்வி நிறுவனங்களிலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:

**BOND,**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (36327)

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### AL 97 கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | S. வரதராஜன் |
| அளவையியல் | — | S S மனோகரன் |
| வர்த்தகம் | — | பசில் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்துநாகரீகம் | — | பாலா |
| இந்துசமயம் | — | தாஸ் |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் |
| புவியியல் | — | சண் |
| கிறீஸ்தவம் | — | நிரஞ்சன் |
| நாடகமும் அரங்கியலும் | — | சிவா |

ஆரம்பம்: 06 - 05 - 1995

சனி 8-00 a. m.

★ இரண்டு பிரிவுகளுக்கு மேல் ஆரம்பிக்கப்படமாட்டாது.

★ பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்வதன் மூலம் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்

(சி/1017)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

### புவனேஸ்வரி சின்னத்துரை

அன்னை மடியில்: 05 — 05 — 1942

ஆண்டவனடியில்: 23 — 03 — 1995

அன்போடரவணைத்து அறிவூட்டி, அமுதூட்டிக் கண் போலெமைக் காத்த கருணை மிகு தெய்வமே! துன்பத்திலெம்மையெல்லாம் துடி துடிக்க வைத்துவிட்டு இன்புற்றிருக்க வெண்ணி இறைவுலகு சென்றனையோ?

எங்கள் அன்புக்கும், மதிப்புக்குமுரிய குடும்பத் தலைவியின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், இன்னும் பல வகையில் உதவிய சகலருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றோம்.

இன்று (22 - 04 - 95) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அவர்கள் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. [36355]

## O/L - 95 DAY CLASS

வாரத்தில் 6 நாட்கள்
காலை 8-00 — பி. ப. 1-00 வரை

★ தூர இட மாணவர் நலன் கருதி வகுப்புகள் பி. ப. 1-00 மணியுடன் நிறுத்தப்படுகின்றன.
★ நிறுவன மாணவர்களின் கடந்த கால பெறுபேறுகள் நிகழ் காலத்திற்கு சான்றாகும்.
★ அதே திறமையான ஆசிரியர் குழுவுடன் மேலும் சில சிறப்பு விரிவுரையாளர்கள்.

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

மீண்டும் ஒரு பிரிவு
ஏப்ரல் 27இல்

(36354)

★ அதி உயர்ரக பற்றரிகள் (லொறி, கார், மோட்டார் சைக்கிள்)

★ இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த மலசலகூட பேசின், கொமேட் சுவருக்கு பதிக்கும் மாபிள், வெள்ளை சிமெந்து பேக்கறி சிமெந்து (Fire Clay)

★ பெயின்ற் வகைகளும் மற்றும் நிலவிரிப்புகள் ரெக்சின் காட்போட் சீற், ஸ்பொஞ், அன்பளிப்பு பொருள்கள், கிளாஸ் வகைகள், பிளேற்ஸ், டிஸ், ரீமக், ரீசெற் என்பனவும்

மலிந்த விலையில் தரமான பொருள்களை பெற்றுக் கொள்ள

இன்றே நாடுங்கள்

★ நியூ விமாகி ★

27/3, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1307)

## BRILLIANT INSTITUTE

சாவகச்சேரி.

### O/L DAY CLASSES & A/L 97 கணக்கியல், வர்த்தக வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — | திரு. பாலகிருஷ்ணன் |
| வர்த்தகம் | — | திரு. ரவி |

தென்மராட்சியில் O/L பரீட்சையில் அதிசிறந்த பெறுபேற்றினை வழங்கி வருகின்ற எமது நிறுவனத்தின் ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. அருட்சோதிவர்ணன், திரு. அற்புதராஜா |
| விஞ்ஞானம் | — | திரு. மகேந்திரன், திரு. ஸ்ரீதரன் |
| தமிழ் | — | திரு. தர்மராஜா, திரு. சுதாகரன் |
| வர்த்தகம் | — | திரு. பாலகிருஷ்ணன், திரு. ரவி |
| ஆங்கிலம் | — | திரு. ஸ்ரீதர்சர்மா |
| சமூகக்கல்வி | — | திரு. ரவி |

ஆரம்பம்: 24 - 04 - 1995

பி. ப. 4-00 மணி

(36358) — நிர்வாகி.

## மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக் கூட்டமும் பழைய மாணவர் ஒன்றிய தினமும்

ஒன்றிய தினம்:
21 — 05 — 1995 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 12-30 மணிக்கு

வருடாந்தப் பொதுக் கூட்டம்:
22 — 05 — 1995 திங்கட்கிழமை
மாலை 3-30 மணிக்கு

பிரேரணைகளும், தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்குரிய வேட்பு மனுக்களும் 06 - 05 - 1995 சனிக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

செயலாளர்,
ந. சண்முகராஜா.

"ஜமுனா"
சுதுமலை மேற்கு,
மானிப்பாய். [36360]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காஙவர் வீதி
யாழ்ப்பாணம்

## கொள்ளை லாபம்!

சிங்கள அரசு பொருளாதாரத் தடை விதிப்பதனை எதிர்த்துக் கத்துகிறோம்; கண்டிக்கிறோம்; ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடத்தினோம்.

"ஆனால் தமிழனே தமிழனைச் சுரண்டுவதற்கு, தருணம் பார்த்துப் பொருள்களைப் பதுக்கி, கொள்ளை லாபம் அடிக்கும் கொடுமைக்கு எதிராக எதுவும் செய்ய முடியாதா?

புதன்கிழமைக்குப் பின்னர் பாவனைப் பொருள்கள் பலவற்றின் விலைகள் உயர்ந்து விட்டதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்களில் ஒருவர் இவ்வாறு கேட்டு எழுதியுள்ளார்.

பதுக்கல், கொள்ளை லாபம் என்பன சாதாரண காலத்திலேயே சமூக விரோதச் செயல்களாகக் கணிக்கப்படுபவை. பல நாடுகளில் பதுக்கலுக்கும் கொள்ளை லாபத்துக்கும் மிகக் கடும் தண்டனைகள் உண்டு.

வர்த்தகர்கள் தமது சுயலாபம் கருதி மேற்கொள்ளும் பதுக்கலும் கொள்ளை லாபமும் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிப்பன. மிக ஆழமாகவும் உன்னிப்பாகவும் பார்த்தால், வசதி குறைந்தவர்களை மிகக் குறிப்பாக அன்றாடம் காய்ச்சிகளைப் பல சந்தர்ப்பங்களில் பட்டினி போட்டு வாட்டும் கொடிய கருவிகளாகவும் இவை விளங்குகின்றன.

போர்ச் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பிரதேச மக்களைப் பொறுத்த வரையில், பதுக்கல், கொள்ளைலாபம் என்பன மிக மிகப் பெரும்பாலான மக்களை, நூற்றுக்குத் தொண்ணூறு சத வீதமானவர்களை பாதிக்கும் என்பதனை புள்ளி விவரம் காட்டி விளக்க வேண்டியதில்லை.

ஸ்ரீலங்கா அரசு போடும் அழுத்தங்கள், நெருக்குதல்களின் மத்தியிலும், தாம் கொண்ட சுதந்திர வேட்கையினால் எதனையும் தாங்கி நிமிர்ந்து நிற்கிறான் தமிழன். அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கும் பல கஷ்டங்கள், இன்னல்கள், மற்றும் தியாகங்களினாலேயே அவன் இன்னும் வாழ முடிகிறது.

சுதந்திரம் ஒன்றை நாடி அதன் எதிரி கொடுக்கும் கஷ்டங்களைத் தாங்குவதற்குத் தயார் என்பதற்காக பதுக்கல், கொள்ளை லாபம் என்ற சமூக விரோதச் செயல்களின் விளைவான கஷ்டங்களையும், பாதிப்புக்களையும் தாங்கியாக வேண்டும் என்பது நியதியல்ல.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல, உள்ளூர் வர்த்தகர்கள், வியாபாரிகள் தமிழ் மக்களைச் சுரண்டுவதை அனுமதிக்கக் கூடாது.

சாதாரண—இயல்புநிலை—காலத்தில் உள்ளதை விட போர்ச் சூழ்நிலையில் மிகுந்த சமூகப் பொறுப்புடனும், மனநீதியுடனும் பணியாற்ற வேண்டிய தார்மீகக் கடமை தமிழீழப்பிரசை ஒவ்வொருவருக்கும் உண்டு.

தமிழ்ப் பகுதிகளில் பணிபுரியும் உயர் அரச அதிகாரிகள் முதற் கொண்டு உள்ளூர் வர்த்தகர்கள் விவசாயி தொழிலாளி வரை இந்தப் பொறுப்பைப் புறக்கணிக்கும் எவரும் இனவிரோதியாகவும்; சமூக விரோதியாகவுமே கணிக்கப்பட வேண்டியவர்;

மிகக் குறிப்பாக மக்களின் நலன்களைக் கவனிக்க வேண்டிய அதிகாரிகளும், வர்த்தகர்களும் சமூகப் பொறுப்பு நிறைந்தவராகப் பணிபுரிதல் அவசியம். வணிகர் கழகங்கள் போன்ற அமைப்புகள் இயங்கிய போதிலும் காத்திருந்து கொள்ளை லாபம், பதுக்கல் ஆகியன நடப்பது துரதிர்ஷ்டமானதாகும். அதனால் இந்த அமைப்புக்கள் வலுவற்றவையோ என்ற கேள்வியும் எழுகிறது.

வர்த்தகர்கள் தாம் புரியும் அநியாயங்களுக்கான பழியை குறிப்பாக விலை உயர்விற்கான காரணத்தை விடுதலைப் புலிகள் மீது சுமத்தி தாம் தப்பிவிட முயல்கின்றார்கள். இந்த நிலை நீக்கப்பட வேண்டும். வர்த்தகர்கள் தவறிழைக்காமல் தடுக்கப்பட வேண்டும்.

---

விஜேகுமாரணதுங்க படுகொலை சம்பவம்:

# பொலீஸ் சரிவர விசாரணை நடத்தாதது குறித்து ஆணைக்குழு அதிருப்தி

கொழும்பு, ஏப். 22

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவர் விஜய குமாரணதுங்காவின் படுகொலை சம்பந்தமாக நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தப் படுகொலை சம்பந்தமாக விசாரணை நடத்திய பொலீஸ் உத்தியோகத்தர்கள் நேற்று சாட்சியம் அளித்தபோது அவர்கள் சரிவர விசாரணைகளைநடத்தாதது குறித்துஆணைக்குழு அதிருப்தி தெரிவித்ததோடு, எச்சரிக்கையும் செய்தது.

கிருலப்பனை பொலீஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரியும் தற்பொழுது உதவிப் பொலீஸ் அத்தியட்சகராக இருப்பவருமான ஜனாப் முகமது சரீப் ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்த போது—

1988ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றதும், நேரடியாக தாம் உத்தியோக பூர்வமான விசாரணைகளை ஆரம்பித்ததாகவும்—

எனினும் பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா விசாரணைகள் நடத்துவதற்கு வேறுசில உத்தியோகத்தர்களை அமர்த்தினார் என்று கூறினார்.

கிருலப்பனை பொலீஸின் குற்றத் தடுப்பு பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாக இருந்தவரும் தற்பொழுது பொலீஸ் உதவி அத்தியட்சகராக இருப்பவருமான முத்துக்குமார் துரைசிங்கம் சாட்சியம் அளிக்கையில்—

இந்தப் படுகொலை சம்பந்தமாக ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள போதிலும், அவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறினார்.

இந்தக் கொடூர படுகொலை சம்பந்தமாக நீதிவான் ஒருவரின் விசாரணை நடத்தப்படவில்லை. 5சந்தேக நபர்களுக்கு என்ன நடந்தது என்று தமக்கு ஒன்றும் தெரியாது என அவர் கூறினார்.

1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி பிரதம இன்ஸ்பெக்டர் உபேந்திரா 3சந்தேக நபர்களை கைது செய்து நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

மேலும் விசாரணை நடத்துவதற்காக அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பிற சந்தேக நபர்கள் தாம் இந்தப் படுகொலைக்கு உடந்தையாக இருந்தனர் என ஒப்புக் கொண்டிருந்த போதும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாததற்கான காரணத்தை இந்த உத்தியோகத்தரினால் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்க முடியவில்லை.

இந்தக் கட்டத்தில் நீதியரசர் சரத் என். சில்வா சாட்சியை எச்சரிக்கை செய்தார். (ஒ)

## இலவச தையல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 22

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஊர்காவற்றுறைப் பிரிவு, யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சியை வழங்க உள்ளது.

ஆர்வமுடையோர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோயில் வீதியில் அமைந்துள்ள மேற்படி பிரிவு பணிமனையில் விண்ணப்பங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

(ஒ-14)

## ஆய்வரங்கு

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் பயிலரங்கும் ஆய்வரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆனைப்பந்தி உயர்தர கலைக் கல்லூரியில் நடைபெறும்.

ஆய்வரங்கில் கோசார வேதங்க நிலைகளும் 'கோசார விபரீத வேதங்க நிலைகளும்' எனும் பொருள்பற்றிய ஆய்வு இடம்பெறும்.

---

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# நோயாளர் நலன்புரிசங்க அலுவலகத்துக்கு அடிக்கல்

சாவகச்சேரி ஏப் 22

அன்னை பூபதி ஏழாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரிச் சங்க அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த புதன்கிழமை காலை 10 மணிக்கு நோயாளர் நலன்புரி சங்க — தலைவர் டாக்டர் சிவபாலன் தலைமையில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கட்டடத்திற்கான அடிக்கல்லினை தமிழீழ விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த எஸ். பத்மலோஜினியும், தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் நட்டு வைத்தனர்.

தொடர்ந்து இந் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும், மருத்துவந் பிரிவைச் சேர்ந்த பத்மலோஜினியும் நலன் புரி சங்க தலைவர் டாக்டர் சிவபாலனும் உரை நிகழ்த்தினர்

கடந்த காலங்களில் தென்மராட்சி நோயாளர் நலன்புரி சங்கத்தினால் நடத்தப்பட்ட முச்சக்கர வண்டிச் சேவை அதன் முன்னாள். தலைவர் த. நவரத்தினராசாவினால் தற்போதைய நோயாளர் நலன்புரி சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

சாவகச்சேரி நோயாளர் நலன்புரி சங்கத்தைச் சேர்ந்த திரு. தவேந்திரன், அன்பளிப்புப் பொருள்களை சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி அருள்லிங்கத்திடம் கையளித்தார்.

மேற்படி நிகழ்வில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் இரத்ததானம் வழங்கினர். இவ் வைபவத்தில் பொதுமக்கள், வைத்திய சாலை ஊழியர்கள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள், இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சாவச்சேரி நகரசபை செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.( ஒ-31)

## நாளை

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பரிசளிப்பும் முத்தமிழ் விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் திரு. ஸ்ரீ பாஸ்கரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பரியோவான் கல்லூரி அதிபர் திரு.சி. தனபாலனும் திருமதி. பிரேமராணி தனபாலனும் கலந்து கொள்வர்.

---

# காலக்கெடு போரை ஆரம்பிக்கவல்ல; அரசே சமாதான சூழ்நிலைக்கு குந்தகம்

*வடமராட்சிக் கோட்டத்தில் நடைபெற்ற அன்னைபூபதி நினைவு தினத் பொதுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆற்றிய உரையின் நேற்றைய தொடர்ச்சி இங்கு பிரசுரமாகியுள்ளது*

நாங்கள் பேச்சுவார்த்தையை விரைவாக்க வேண்டும் என எண்ணுகின்றோம். முக்கிய கட்டங்கள் பற்றி பேச வேண்டும் என்று நாங்கள் அவர்களோடு அடிக்கடி தொடர்பு கொள்கின்றோம்.

4ஆம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான காலத்தைக் குறிக்காமல், அதில் பேசவேண்டிய விடயங்கள் பற்றி நிர்ணயக்காமல், கடிதம் அனுப்புகிறார்கள்.

இவர்கள் ஏன் இப்படி நிற்கிறார்கள்.

மார்ச் மாதத்துக்குள் 4ஆம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான திகதி நிர்ணயிக்கப்படவில்லை.

மாறாக இந்த ஏப்ரல் மாதத்தில் தான் அதுவும் நாம் கொடுத்த அழுத்தங்களாலும், எமது பிரயத்தனத்தாலுமே பேச்சுவார்த்தை நடந்தது.

மார்ச் மாத நடுப்பகுதியிலோ, இறுதியிலோ பேச்சுவார்த்தை நடக்குமென்று திர்க்கமாக அரசு எப்போதாவது அறிவித்ததா?

அவர்களுடைய உரைகளிலோ, தொடர்புசாதனங்களிலோ இது பற்றி தெளிவாக்கப்பட்டிருக்கிறதா? இல்லை,

ஆனால் ஒருவிடயம் அங்கே நாசுக்காகச் சொல்லப்படுகிறது.

பேச்சுவார்த்தை நடக்கும்; அது இந்த திகதியில் நடக்கலாம்; இப்படி பேச்சுக்கள் அடிபடுகின்றன; இப்படி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன; ஆனால் மார்ச் 3ஆம் வாரத்தில்தான் பேச்சுக்கள் நடக்கும் என்று செல்லப்படுகிறது. என்று வெறும் செய்திகளே வந்தன.

ஏன் இப்படி?

அரசு ஆணித்தரமாக மனந்திறந்து செயற்பட்டிருக்குமானால், எமக்கும், எமது மக்களுக்கும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என விரும்பினால் அரசு ஏன் இப்படி நடந்துகொள்ள வேண்டும்?

### காலக்கெடு பற்றி சிந்திக்க வேண்டும்

இந்த கட்டத்தில் தான் நாம் ஒரு காலக்கெடுவை விதித்தோம். இது ஏன் என்று சிந்திக்க வேண்டும்.

அரசு 4ஆம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிக்காமல் இழுத்தடிக்கிறது.

இதனுடைய பின்னணியும் மர்மமும் என்ன?

ஏப்ரல் மாதத்திலே இப்பொழுது நடக்கும் சார்க் மாநாடு, அதற்கு முன் நடக்க இருந்த இலங்கைக்கு நிதி வழங்குகின்ற நிதி நிறுவனங்களுக்கான மாநாடு ஆகியனவே அவை.

இக்கூட்டங்களில் இலங்கையின் ஜனாதிபதியோ, அவரின் அமைச்சர்களோ கலந்து கொள்ளவேண்டும்.

அப்படி அவர்கள் கலந்து கொள்ளும் பொழுது, இங்கு அமைதி நிலவுகிறது. அதன் அடிப்படையில் எமக்கும்-புலிகளுக்கும் இடையில் உடன்பாடு நிலவுகிறது; புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

இது தொடர்பாக சாத்திய வளக்கூற்று அறிக்கைகளும், படங்களும் செயற்பாட்டுத் திட்டங்களும் இவை. எனவே இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு பெருந்தொகையான பணம் வேண்டும் எனக் கோர முடியும்.

### திறைசேரியை நிரப்பும் திட்டம்

இவ்வாறு கோரிக்கை விடுத்து பெருந்தொகைப் பணத்தைப் பெற்று பொருளாதார வீழ்ச்சிக்குள் இருக்கின்ற அரசின் திறைசேரியை நிரப்பி, தன்னை பலப்படுத்துவது தான் அரசின் திட்டம்.

நாம் உண்மையின் அடிப்படையில் எமக்கு சரியான நம்பிக்கையை தராத பட்சத்தில் நாம் எமது ஆதரவை அரசுக்கு நல்கினால், அரசு அதனைப் பயன்படுத்தி தன்னைப் பலப்படுத்தும்; திறைசேரியை பலப்படுத்தும்.

பொருளாதார வீழ்ச்சிக்குள் முடங்கிப் போய்க் கிடக்கும், முடங்கப் போகின்ற அரசு அதிலிருந்து தன்னை இப் பணத்தின் மூலம் மீள்வித்துக் கொண்டு பலமான நிலையில் எங்கள் மீது ஒரு போரைத் திணிக்கும்.

அப்படி ஒரு போர் நடந்தால், கடந்த காலங்களை விட மிகக் கடுமையான போராக அது இருக்கும்.

### ஒரு தலைக்கு ஒரு ஷெல்!

ஒரு தலைக்கு ஒரு ஷெல் அடிக்கக் கூடிய நிலை உருவாகும்.

அப்படியான நிலையால் எமது மக்களுக்கு — சொத்துக்களுக்கு — சுதந்திரப் போராட்டத்துக்கு — ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அதனால்தான் நாங்கள் காலக்கெடுவை விதித்தோம்.

எமது மக்களுக்கு ஆபத்து ஏற்படக் கூடாது; சொத்துக்கள் இழக்கப்படக் கூடாது; எமது சுதந்திரம் பின்தள்ளப்படக் கூடாது; இந்த அடிப் படையிலேயே காலக்கெடு விதிக்கப்பட்டது.

காலக்கெடு விதிப்பதின் ஊடாக அரசு கீழ் இறங்கி எங்களுடைய இன்றைய பிரச்சினைகளுக்கான தீர்வினை முன்வைக்கலாம் — முதற் சந்தர்ப்பம்.

அதாவது நாம் முன்வைத்த பொருளாதாரத் தடை நீக்கம், யுத்த நிறுத்தம், போக்குவரத்து பாதை திறப்பு, கடல் வலயத் தடை நீக்கம் என்ற விடயங்களை அரசு ஏற்று நடைமுறைப்படுத்தும்; அதனால் அமைதி தோன்றும். அதனால் மக்களின் வாழ்க்கை நிலை சீரடையும்.

### தொடர்ச்சியாக யுத்தம் நடத்த முடியாது

ஆனால் இவற்றைக் கவனிக்காமல் இவற்றுக்கான மதிப்பை அளிக்காமல் அரசு மீண்டும் யுத்தத்தைத் தொடர்ந்தால் பொருளாதார வீழ்ச்சிக்குள் இருக்கின்ற அரசால் தொடர்ச்சியாக யுத்தத்தை நடத்த முடியாது.

3 அல்லது 6 மாதங்களுக்கோ அல்லது ஒரு வருடத்துக்கோதான் அவர்களால் தொடர்ச்சியான யுத்தத்தை நடத்த முடியும்.

எனவே இந்த நிலையில் நாம் வேகமாக நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக அரசை முடக்கி, எமது மக்களின் அழிவை தடுக்கலாம்; எமது சுதந்திரத்தை விரைவாகப் பெறலாம் — இது இரண்டாம் கட்டம்.

3 ஆம் கட்டம் —

சர்வதேச நிதி நிறுவனங்களுக்கு இந்தப் பிரச்சினையை முன் வைத்து, வடக்கு-கிழக்கு புனரமைப்பு என்ற பெயரிலே அவற்றிடம் இருந்து அரசு பெற இருந்த பெரும் தொகை நிதியை வழங்க விடாமல், அரசுக்கு ஒரு நிதி தட்டுப்பாட்டு நிலையை ஏற்படுத்துவதும், சர்வதேச அழுத்தத்தை அரசின் மீது திணிப்பதும் எமது போராட்டத்துக்கான, நியாயபூர்வமான கோரிக்கைகளை முன் வைப்பதும் எமது அடுத்த கட்டம்.

போரை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக கெடு விதிக்கவில்லை; நாம் யுத்தப் பிரியர்கள் அல்லர்.

ஆனால் நாம் பலியாகக் கூடாது; மக்களை பெரும் அழிவிலே கொண்டு போய் [illegible] நிலைக்கு [illegible] இருக்கின்றோம்.

### 130 மீறல்கள்

தாக்குதல் தவிர்ப்பு நிலை அமுலுக்கு வந்த பின் கூட 130 மீறல்கள் இடம் பெற்றுள்ளன.

எமது போராளிகளின் படகு இயந்திரக் கோளாறு காரணமாக இயங்க மறுத்ததால், கல்முனைக் கரையில் ஒதுங்கிய போது, அவர்களைச் சுற்றி வளைத்த படையினர், எமது போராளிகளின் ஆயுதங்களைப் பறித்தனர்.

எமது போராளிகளைப் பணயம் வைத்தார்கள்.

கடலிலே சென்ற 35 போராளிகளைச் சுற்றி வளைத்து அவர்களின் ஆயுதங்களைப் பறித்தார்கள்.

ஆனால் எங்களுடைய போராளிகள் கை நீட்டவில்லை; கை கட்டப்பட்ட நிலையில் இருந்தார்கள்.

மன்னாரிலே எமது ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஏன், என்ன அடிப்படையிலே நடந்தது என்று கேட்ட பொழுது, இதை மாற்று இயக்கம் தான் செய்தது. அவர்களைத் தேடுகிறோம் என பொய்ச் சாட்டை சொன்னார்கள்.

மட்டக்களப்பிலும் எமது போராளி ஒருவர், பொலீஸாரின் சித்திரவதை தாங்க முடியாமல் சயனைட் அருந்தினார்.

தாக்குதல் தவிர்ப்பு உடன்படிக்கை அமுலில் உள்ளதால் நான் உங்களுக்கு அடிக்க மாட்டேன்; எமது தலைவரின் உத்தரவு அது என்று அவர் கூறிய போதும் அவரை அவர்கள் பலமாகத் தாக்கினார்கள்.

### ஒப்பந்தத்தை எப்போதோ முறித்திருக்கலாம்

நாங்கள் எப்போதோ ஒப்பந்தத்தை முறித்திருக்கலாம்! போர் தொடங்கி இருக்கலாம்.

எமது மக்களின் நிம்மதியோடு, அவர்களின் பொருளாதார மேம்பாடோடு இந்த சுதந்திரத்தை பெற வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

பேச்சுக்கு முன்பு இருந்தே நாம் நிரந்தர யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி வருகின்றோம். யுத்த நிறுத்தத்தின் பின்தான் பேச்சுக்கள் தொடர வேண்டும்.

அந்த நிலையில் தான் பேச்சுக்கள் முறியாமல் இருக்கும்; தொடர்ந்து பேசலாம். ஆனால் அரசோ பேச்சுக்களின் பின்பே யுத்த நிறுத்தம் என்றது. அதிலும் யுத்த நிறுத்தம் என்ற நிலைக்கு வராமல் தாக்குதல் நிறுத்தம் என்றது.

நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்பட்டால் படைக்கு ஆட்கள் சேர்க்க முடியாது; பயிற்சி வழங்க முடியாது; ஆயுதங்கள் கொள்வனவு செய்ய முடியாது; படைகளை நகர்த்த முடியாது.

### அரசின் தந்திரம்

ஆனால் தாக்குதல் தவிர்ப்பு என்றால் இவற்றைச் செய்யலாம் தாக்குதல் மட்டும் தான் தவிர்ப்பு.

உண்மையில் அரசு சமாதானத்தை விரும்பி இருந்தால் ஏன் ஒரு நிரந்தர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தமுடியாது?

எமது தலைவர் எத்தனையோ சந்தர்ப்பங்களில் மனந்திறந்து இது பற்றிய தமது வெளிப்பாட்டைச் சொன்னார்.

நிரந்தர அமைதியை ஏற்படுத்துவது ஒருநிரந்தர யுத்த நிறுத்தம் எனவே ஒரு நிரந்தர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கோரிக்கைவிட்டார்.

ஆனால் அரசு தாக்குதல் தவிர்ப்புக்குத்தான் ஒப்புக் கொண்டது. ஏன் இந்த தாக்குதல் தவிர்ப்பு?

94, 95 ஆம் ஆண்டுகளின் இறுதி ஆரம்ப காலங்களில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அரசு தளம்பிக்கொண்டிருந்தது.

அரசு தளம்பிக்கொண்டிருந்த நிலையில் எமது போக்கும், வேகமும் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

நாங்கள் போன போக்கில் போயிருந்தால் இந்த அரசினால் ஒன்றுமே செய்து கொள்ள முடியாது முடங்கியிருக்கும்.

எனவே இந்த நிலையில் இருந்து மீள்வதற்காகத்தான் அரசு சமாதானத்துக்கான இந்த நாடகத்தைப் போட்டது.

நாங்களும் அதனை சரியாகப்புரிந்து கொண்டோம் ஆனாலும் இந்த அரசுக்கு எமது நிலைப்பாடுகளைத் தெளிவு படுத்தி, எமது மக்களின் அபிலாஷைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளின் வழிகளை நாங்கள் எடுத்தோம்.

### விட்டுக் கொடுத்தோம்

சமாதானத்துக்கு பட்டுச் சேலை விரித்தோம்; பேச்சுக்களுக்கான நிபந்தனைகளை விட்டுக்கொடுத்தோம் எதை எதை விட்டுக்கொடுக்க முடியாமல் இருந்தோமோ அதையெல்லாம் விட்டுக் கொடுத்தோம்.

அரசு எதை, எதை விட்டுக்கொடுக்க முடியாது என்ற முடிவோடு இருந்ததோ அதே முடிவோடு இருந்தது.

இருந்த நிலையில் இருந்து கொண்டு, அரசு சமாதானம் பேச விளைந்தது.

இறுதியில், யுத்தக் கைதிகளை எம்மிடம் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விட்டு வாசலில் விட்டோம் அழைத்துச் செல்லுங்கள் என்று.

வாசலில் விட்டவர்களை—போர்க் கைதிகளை —அழைத்துச் செல்ல அரசு கவனம் செலுத்தவில்லை.

முதலாவது காலக்கெடு 28 ஆம் திகதி முடிவடையும் நிலையில் 24 ஆம் திகதி அரசு ஒரு பதிலை அனுப்பியது எரிபொருள், பொருளதார, கடல் வலயத் தடைகளை நீக்குவதாக கூறியது.

பொருளாதாரத் தடைகள் எரிபொருள் என்ற விடயம் முக்கியமாக வருகிறது.

### எமது தலைவர் ஏமாறுபவர் அல்லர்

எமது தலைவர் ஏமாறும் தலைவர் அல்லர்.

அரசு இழுத்தடித்துக் கொண்டு போய் எம்மை நலிவுபடுத்த நினைப்பது என்பது எமக்கு நன்கு புரிந்தது இதனால் இரண்டாவது காலக்கெடுவை விதித்தோம்.

இந்த 19 ஆம் திகதி வரை அரசுக்கு 2 ஆவது காலக்கெடு சம்பந்தமான கால அவகாசத்தை வழங்கினோம்.

எனவே 24 ஆம்திகதி தடை நீக்க அறிவிப்பை விடுத்த அரசு இம்மாதம் வரை அதனை நிகழ்த்தவில்லை.

தடை நீக்கம் பற்றிய அறிவிப்பு உத்தியோக பூர்வமாக அரசினால் அறிவிக்கப்படவில்லை.

வர்த்தமானியிலோ, உத்தியோகபூர்வ அரச சாதனங்களிலோ இது பற்றிய அறிவிப்பு வெளியிடப்படவில்லை அரசு அறிவிப்பு செய்ததே அல்லாமல் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதற்கான பணிப்புகள் விடப்படவில்லை.

### இழுத்தடிப்பு நடவடிக்கை

இது ஓர் இழுத்தடிப்பு நடவடிக்கை.

அதே சமயம் சர்வதேசரீதியில் திட்டமிட்ட முறையில் பொய்ப் பிரசாரத்தை மேற்கொள்கிறார்கள்

தென்தமிழீழத்து மக்கள் யுத்த நிலையை விட, இந்த சமாதான காலத்தில் மிகவும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்.

அதே சமயம் குடாநாட்டு இராணுவ நிலைகளும் அகற்றப்படவில்லை.

இன்று சமாதானம் நின்று, 3 ஆம் கட்ட போர் திறந்திருக்கின்ற ஒரு நாள் சமாதான சூழ்நிலை முழுமையாக குலைந்து விட்டது.

ஏனெனில் பலவீனமான நிலையில் இருந்த அரசு தற்போது தன்னைப்பலப்படுத்துகின்றது. பலமான நிலையில் இருந்த எங்களை இந்த சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி பலவீனமாக்குகின்றது. இது சமாதானச் சூழ்நிலைக்கு குந்தகமாகலாம்.

எம்மையும், எமது மக்களையும் பலவீனப்படுத்தி, அழிவைச் சந்திக்க வைப்பதே அரசின் இன்றைய போக்கு.

இதனை நாம் அனுமதிக்க முடியாது.

★

> **இனியும் ஒரு போர் வெடிக்குமானால் அது மிகக் கடுமையானதாக இருக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதன் மற்ஸ் அக்கடமி

உ. அ. அ. பணிமனை வீதி,
சண்டிலிப்பாய்.

## O/L DAY CLASS

| | |
|---|---|
| கணிதம் V. N. பத்மநாதன் | விஞ்ஞானம் P. தயாநிதி |
| தமிழ், சமயம் காரை. S. செங்கா | சமூகக்கல்வி இரா. கணேஷ் |
| ஆங்கிலம் வை.விஜயபாஸ்கரன் | வர்த்தகம் K. சிவஞானம் |

ஆரம்பம்: **24 - 04 - 1995**
திங்கள் காலை 8 00 மணி

★ கணிதபாடம் சித்தி அடையாத மாணவர்களுக்கு பிரத்தியேக கணித வகுப்பு நடைபெறும்.
திங்கள் மாலை 5-00 மணி

[36352]


# மரண அறிவித்தல்கள்

திருமதி
## ஞானசௌந்தரி கனகலிங்கம்

திருமதி ஞானசௌந்தரி கனகலிங்கம் 20 - 04 - 95 அன்று காலை நான்கு மணியளவில் சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வலிபுரம் கனகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சௌந்தரலிங்கம், ஞானலிங்கம், திருமதி கனகசௌந்தரி சண்முகரத்தினம், திருமதி லிங்கசௌந்தரி துரைராஜா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்

அன்னாரின் இறுதி நிகழ்வு 20 - 04 - 95 அன்றே மாலை 4 00 மணிக்கு நிறைவேறியது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம். உரிய நேரத்திற்கு அறிவிப்பதற்கு இயலாத நிலையை முன்னிட்டு மிகவும் மனம் வருந்துகிறோம். இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குடும்பத்தினர்

19, பண்டாரக்குளம் ஒழுங்கை,
நல்லூர்
[36365]

திருமதி
## வேதநாயகம் பாக்கியம்
(அருணி)

திருமதி வேதநாயகம் பாக்கியம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேதநாயகத்தின் அன்பு மனைவியும், அன்புமணி, புஸ்பராணி சூசைதாஸ் (விவசாய ஆராய்ச்சி நிலையம் திருநெல்வேலி), கிளி (இந்தியா), தியாகு (திருகோணமலை), சந்திரபோஸ் (அவுஸ்திரேலியா), சுசிலா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரனிஸ்லோஸ் (முன்னாள் விவசாய ஆராய்ச்சி நிலைய உத்தியோகஸ்தர் கிளிநொச்சி), ஜீவராஜா, யசிந்தா டோமினிக் (இந்தியா), கலா (திருகோணமலை), ஜெனி (அவுஸ்திரேலியா), சிவராஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நல்லம்மா அந்தோனிப்பிள்ளை, மற்றும் ஜெபமணி பேதுருப்பிள்ளை (திருகோணமலை), மலர் இரத்தினம், அருளம்மா இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு 196 குருசோ வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து பரிசுத்த கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
A.V சூசைதாஸ்
(மகன்)

196, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்
(36369)

## செல்வன் அருள்நேசன் வினோத

[ 1 ஆம் வருட மாணவன் - ஜோன் பொஸ்கோ பாடசாலை]

யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் வீதி 8 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த செல்வன் அருள்நேசன் வினோத் நேற்று காலமானார். இவர் மைக்கல் அருள்நேசன் [யாழ் ப.நோ கூ சங்கம்] மரியகொறற்றி ஆகியோரின் அன்பு புதல்வரும், மோனா சேமந்தி [மாணவி யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்] பற்றி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அஞ்சலோ, யூலியஸ், எமலியானூஸ், எட்வேட்றோய், ஜெசிஸ்மரி [புத்தளம்], யுலேகா, அருட்சகோதரி மேரி இலேன் [கார்மேல் மடம், மட்டக்களப்பு], திருமதி பேற்றம் காமினி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகனும், திருமதி ஏஞ்சல் சௌறஞ்சியா [கொழும்பு], மேயா ஞானசோதி, செல்வதாஸ் [பிரான்ஸ்], ஜோண் கெனடி (யப்பான்) ஆகியோரின் மருமகனும், பேனாட் பாக்கியநாதர், காலஞ்சென்றவர்களான மொனிக்கம்மா, சந்தியோ மைக்கல், திரேசம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அவரது பூதவுடல் இன்று (22.4 95) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ் மரி புதுமைமாதா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக மரி கொஞ்செஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பேனாட் பாக்கியநாதர்
(பேரன்)

இல 8, சென் ஜேம்ஸ் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
[36373]

## குமண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
றும் பெரியரோரச் பற்றறிகள் வந்திருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று வரை இக்கப்பல் பருத்தித்துறை துறை முகத்துக்கு வந்து சேரவில்லை.

இதனால் துறைமுகத்தில் தொழிலாளர்கள் வெகுநேரம் காத்திருந்துவிட்டுத் திரும்பிச் சென்றனர்.

வாகனங்களும் திரும்பிச் சென்றன. [இ-155]


## "ஆசிரியம்"
## மலர் வெளியீட்டு விழா
# அழைப்பிதழ்

இடம்: கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பிரதான மண்டபம்
காலம்: 23-04-1995 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு. ப. 9. 30 மணி

பிரதம விருந்தினர்
திரு. K. கந்தசாமி M. A. Dip in Ed.SLEAS.
(கல்விப்பணிப்பாளர் வலயம் II)

சிறப்பு விருந்தினர்கள்
திரு. மு. தங்கவேல் (B. sc. Dip in Ed in Comp.Sc)
(செயல்திட்ட அதிகாரி N. I. E )

திரு. E சிவானந்தன் B.A, Dip in Ed.SLEAS.
[DD E Zone - 2]
(இணைப்பாளர் தே. க. நி)

அருட்திரு. பிரான்சிஸ் யோசவ் அடிகளார்
(தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத் தலைவர்)

வரவேற்புரை:
திரு. B தனபாலன் B. A.

தலைமையுரை:
ஏ. சி ஜோர்ஜ் B. A [Hons]

சிரேஷ்ட விரிவுரையாளர் உரை
திரு. தி கமலநாதன் M. A. Dip in Ed

மலர் விமர்சன உரை
கலாநிதி சபா ஜெயராசா
யாழ். பல்கலைக்கழகம்

மலர் வெளியீட்டுரை
திரு. கு. சண்முகநாதன் B. Ed. MA

பதிலுரை:
பெ. பிரான்சிஸ் B. A [Hons]
(மலராசிரியர்)

நன்றியுரை:
S. சந்திரன் B A

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


தே. க. நி.
மா/இந்து மகளிர் கல்லூரி நிலையம்
மாணவர் அமைப்பு

விளம்பர அனுசரணை
இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்
இல 50 சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்

(சி/1067)


31 ஆம் நாள்
# நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்

தோற்றம்: 16 — 03 — 1938



மறைவு: 25 — 03 — 1995

அமரர்
## சோமசுந்தரம் சிதம்பரநாதன்

[முன்னாள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாண பிரிவின் சிரேஷ்ட தொழில் நுட்ப அதிகாரி]

பாசத்தைப் பொழிந்து தன் உயிர்க்கு மேலாக —
எம்மைக் காத்து ஆளாக்கிய அப்பாவே!
மாதம் ஒன்று சென்றதப்பா உங்கள் ஆசைமுகம் —
பார்த்து உற்றதுணை உங்களைப் போல் கிட்டுமோ —
எங்களுக்கு உங்களது திடீர் மறைவை நாங்களும்
உங்களைச் சார்ந்தவர்களும் மறக்க முடியாமல் —
வெதும்புகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எங்கள் வாழ் நாள் முழுவதும் இறைஞ்சுகிறோம்.

அப்பா நோயுற்றிருந்தவேளை உதவி புரிந்த யாழ் போதனா வைத்தியசாலை டாக்டர்கள், மருத்துவ மாணவர்கள், தாதியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், அனைவர்க்கும், மலர் வளையங்கள் வைத்தும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும் அனுதாபங்களைத் தெரிவித்த அன்பர்களுக்கும், வீதி அபிவிருத்தி அதிகார சபையையும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தையும் சேர்ந்த சகலருக்கும், மற்றும் உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பு மனைவி, மகன்.

612 (934) கே. கே. எஸ் வீதி.
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
[36359]

# கரும்புலிகள் உருவப்பட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெறும் பாதைகள் பற்றிய விவரம் வருமாறு:-

**வலிகாமக் கோட்டம்**

நாளை காலை 9 மணிக்கு தட்டாதெருச் சந்தியில் இருந்து ஊர்திப்பவனி ஆரம்பமாகும். அங்கிருந்து மானிப்பாய் வீதி ஊடாக ஆனைக்கோட்டை சந்தி — நவாலி ஊடாக அரசடிச்சந்தி சங்கரத்தைச்சந்தி — அராலி வீதியூடாக அராலிச்சந்தி மீண்டும் அதே வழியாக வட்டுக்கோட்டைச்சந்தி சித்தன்கேணி வீதியூடாகமாவடிச்சந்தி — மாவடி வீதி ஊடாக முளாய்ச்சந்தி — சுழிபுரம் வீதி ஊடாக சுழிபுரம் சந்தி — அங்கிருந்து சித்தங்கேணிச்சந்தி — சங்கானைச் சந்தி சங்கானை வீதி ஊடாக தொட்டிலடிச்சந்தி மானிப்பாய் வீதி ஊடாக, சிரணிச் சந்தி ஊடாக மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலடி — சுதுமலை வீதியூடாக தாவடிச்சந்தி காங்கேசன் துறை வீதியூடாக, இணுவில் சந்தியூடாக, மருதனார்மடம் சந்தி மருதனார்மடம் சந்தி, யூடாக சுன்னாகம் சந்தியை அடைந்து அங்கு தரிக்கும்.

தொடர்ந்து நாளை மறுதினம் திங்களன்று காலை 8 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு சுன்னாகம் சந்தியூடாக மல்லாகம் சந்தி — அதேவழியாக மீண்டும் சுன்னாகம் சந்தி — புத்தூர் வீதியூடாகப் புன்னாலைக்கட்டுவன் சந்தி — பலாலி வீதியூடாக உரும்பிராய் சந்தி — உரும்பிராய் சந்தியூடாக கோண்டாவில் சந்தி — பலாலி வீதியூடாக திருநெல்வேலிச் சந்தி — கந்தர்மடப் சந்தியை அடைந்து, அரசடிச் சந்தியூடாக நல்லூர் பின் வீதியை அடைந்து, பருத்தித்துறை வீதி வழியாக முத்திரைச்சந்தி — அதே வழியாக கல்வியங்காட்டுச் சந்தி — இருபாலைச் சந்தி — பின் கோப்பாய்சந்தியை அடைந்து அதே வழியாக நீர்வேலி சென்று அதே வழியாக சிறுப்பிட்டி, புத்தூர் வழியாக ஆவரங்கால் சந்தியை பிற்பகல் 3 மணிக்குச் சென்றடையும்.

**தென்மராட்சி கோட்டம்**

ஊர்திப்பவனி நாளைகாலை 9 மணிக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து ஆரம்பமாகி திருநெல்வேலிச் சந்தியூடாக இலுப்பையடிச் சந்தி — ஐந்து சந்தியூடாக நாவாந்துறை — கொட்டடி யூடாக குருநகர் — கடற்கரை வீதி வழியாக பாசையூர் — அதே வழியாக கொழும்புத்துறை — அரியாலைச் சந்தி — கண்டி வீதியூடாக நாவற்குழிச்சந்தி — அதே வழியாக கைதடிச் சந்தி — கண்டி வீதியூடாக மட்டுவில் நுணாவில் சந்தி — பருத்தித்துறை வீதியூடாக கனகம்புளியடிச் சந்தி — சாவகச்சேரி வீதியூடாக சாவகச்சேரி நகரம் — கண்டி வீதிவழியாக புத்தூர் சந்தி — தொடர்ந்து அல்லாரை வீதி ஊடாக கச்சாய் சந்தி — கிளாலி வீதி வழியூடாக பண்டிதர் குடியிருப்பு — அல்லிப்பளை புலோப்பளை ஊடாக பளை நகர் — கண்டி வீதியூடாக எழுதுமட்டுவாள் சந்தி — அவ்வழியாக கொடிகாமம் சந்தி — பருத்தித்துறை வீதியூடாக வரணிச் சந்தி — அங்கிருந்து அந்தவழி ஊடாக கலிகைச் சந்தியை அடைந்து அங்கு தரித்து நிற்கும்.

**வடமராட்சி கோட்டம்**

ஊர்திப்பவனி நாளை மறுதினம் திங்களன்று காலை 7 மணிக்கு கலிகைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி மந்திகைச் சந்தியை அடைந்து அங்கிருந்து பருத்தித்துறை பஸ் நிலையம் — கடற்கரை வீதியூடாக, இன்பருட்டி — அதே வீதியூடாக பொலிகண்டி, ஆலடிச் சந்தி — வல்வெட்டித்துறைச் சந்தி — கடற்கரை வீதியூடாக தொண்டமானாறுச் சந்தி — உடுப்பிட்டி வீதி ஊடாக, உடுப்பிட்டிச் சந்தி — நெல்லியடி வீதியூடாக வதிரிச் சந்தி — மாலிச் சந்தியூடாக மந்திகை — துன்னாலை வீதியூடாக கலிகைச் சந்தி — கரவெட்டி ஊடாக கோவிச் சந்தை அவ்வீதியூடாக நெல்லியடிச் சந்தியை வந்தடைந்து பொதுக்கூட்ட மைதானத்தைச் சென்றடையும்.

**வடமராட்சி கிழக்கு**

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு உடுத்துறை சனசமூக நிலையத்தில் இருந்து ஊர்திப்பவனி ஆரம்பமாகி கடற்கரை வீதி வழியாக 10 மணிக்கு தனிப்பனை முகாம் — கொடுக்காய் முகாம் — பின்னர் நாகர் கோயில் ஊடாக குடத்தனை வடக்கு பின்னர் பிரதான வீதி வழியாக மணற்காடு — பின்னர் பிரதான வீதி வழியாக 4 மணிக்குநெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை சென்றடையும்.

அதைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கடற் கரும்புலிகள் நினைவாக பொதுக்கூட்டம் நடைபெறும்.

ஊர்திப்பவனி செல்லும் இடங்களிலும் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. (ஐ)

## பயணிகளின்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சென்ற பயணிகள் பலரும் அந்தப் பொருள்களை எடுத்துச்செல்ல அரசு மீண்டும் தடைவிதித்த தகவலை அறிந்திருக்கவில்லை என்றும் —

எனவே டற்றறிகள் மற்றும் கைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பவற்றை அவர்கள் தம்முடன் கொண்டு சென்றிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருமலை துறைமுகத்தில் வைத்து பயணிகளின் பொதிகளைப் படையினர் நுணுக்கமாக தீவிர சோதனைக்கு உட்படுத்தினர் என்று பயணிகள் தெரிவித்தனர். [ஐ-4]

## இறந்த---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
னதும கப்டன்களைக் காணவில்லைஎன்றும் —

காயமுற்ற கடற்படையினரில் லெ. கொமாண்டர் ஒருவரும் அடங்குவார் என்றும் — இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

தாக்குதலுக்குள்ளான இரண்டு பீரங்கிப் படகுகளுக்கும் அருகில் நங்கூடமிட்டிருந்த மற்றொரு பீரங்கிப் படகான "ஜகதா" சேதமடையாமல் தப்பியது.

சூரயா பீரங்கிப் படகு புதன்கிழமை அதிகாலை 12 45 மணிக்கு மூழ்கடிக்கப் பட்டதாகவும் —

அது அழிக்கப்பட்ட ஏழு நிமிட நேர இடைவெளியின் பின்னர் ரணசுரு வெடித்துச் சிதறியதாகவும் கடற்படை வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன. (அ)

## கொழும்பில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பின் ஹோட்டல்கள், லொட்ஜுகளில தங்கியிருந்த சுமார் 200க்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கடந்த 24 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டனர் என்றும் —

அவர்களில் பெரும்பாலானோர் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும் — பி. பி. ஸி. தெரிவித்தது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர் கொழும்பில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் கைது செய்யப்பட்டது இதுவே முதல் தடவை என்றும் பி.பி. ஸி. தெரிவித்தது. இ

# மரண அறிவித்தல்கள்

## சுப்ரமணியம் பத்மநாதன்

கொக்குவில் மேற்கு - மணியர்பதி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்ரமணியம் பத்மநாதன் நேற்றுக் காலமானார்

இவர் திருசெல்வநாயகியின் (U.K ), அன்புக் கணவரும், சத்தியபாமாவின் (U.K ) அன்புத் தந்தையும், வரதலிங்கத்தின் [U K ] அன்பு மாமனாரும், இராசலிங்கம், இராமநாதன் [Canada], சரோஜினிதேவி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [22.4 95] சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண்முகநாதன்
[சகோதரர்]

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு.
[36372]

திருமதி
## சௌந்தரநாயகி பேரம்பலம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பில் வசித்தவருமாகிய சௌந்தரநாயகி பேரம்பலம் கொழும்பில் காலமானார்.

இவர் பேரம்பலம் (L. P T கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான சதாசிவம் பிள்ளை - பொன்னம்மாவின் மகளும், பேரின்பவதி [நோர்வே], பேரின்பவேள் [நோர்வே] ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் கதிர்காமநாதன் [நோர்வே] அவர்களின் அன்பு மாமியாரும், அஜினி, யமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விஸ்வலிங்கம், சுந்தரம்பிள்ளை [தலையாட்டி], குலசேகரம் பிள்ளை [சங்கீதபூஷணம்], இராசதுரை [கனடா], திருமதி அன்னலட்சுமி சண்முகராஜா [கொக்குவில்], காலஞ்சென்றவர்களான சரவணமுத்து [ஆசிரியர்], சபாரட்ணம், திருமதி கமலாம்பிகை மார்க்கண்டு, சாந்தலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [22 - 04 - 1995] பொரல்ல ஜயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு கனத்தை மயானத்தில் ஈமக்கிரியைகள் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சண்முகராஜா
[மைத்துனர்]

2 ஆம் ஒழுங்கை,
பொற்பதி வீதி,
கொக்குவில்.
[36374]

## வைரவன் வேலாயுதம

மீனாட்சி அம்மன் கோவிலடி கொட்டடியை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இடம் பெயர்ந்து கொக்குவில் மேற்கில் வசித்தவருமாகிய வைரவன் வேலாயுதம் நேற்று வெள்ளி காலமாகி விட்டார்.

இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், நடராசா (குகன் லொறி உரிமையாளர்), சின்னராசா (சிற்றி மெடிக்கல்), தவராசா, கமலாதேவி, நகுலேஸ்வரன் (சண்டி - லொறி உரிமையாளர்), சத்தியசீன் (சத்தி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், புஸ்பராவ, செல்வராணி, நிர்மலாதேவி, காலஞ்சென்ற பாணிநாதன் மற்றும் ஜெயசிறி ஆகியோரின் அன்புக்கிய மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (22 04- 95) இன்று சனி காலை 10 மணியளவில் கொக்குவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்குதகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
வே. நடராசா
(மகன்)
குகன் லொறி உரிமையாளர்

[57363]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org